# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
**Tele :** 04630 - 256157

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

## மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள்

1. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும், எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாயிருக்க அவரால் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக நான் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரித்து, நீங்கள் பக்தி விருத்தி அடைந்து பூரண புருஷராகும்படி கடந்து செல்ல தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுத்து சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதை எழுதுகிறேன். இங்கு நான் சகலத்தையும் சத்தியமாக எழுதுவதால் அனேகருடைய வெறுப்புக்கு பாத்திரவானாகலாம், ஆனால் அது குறித்து ஒன்றுக்கும் நான் கவலைப்படேன். ஏனென்றால் நான் எழுதுகிறது பொய்யல்ல,கிறிஸ்துவுக்குள் உண்மையை எழுதுகிறேன் என்று பரிசுத்தஆவிக்குள் என் மனச் சாட்சியும் எனக்கு சாட்சியாய் இருக்கிறது. விசுவாசிகள் இன்றைய சபையின் நிலையையும், அதன் மெய்ப்பர்களுடைய நிலையையும் அறிந்து கொள்ள வேண்டும், அவர்கள் வலது இடது கைக்கு வித்தியாசம் தெரியாதவர்களாக இருந்துவிடக்கூடாது, அதன்மூலம் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது, அவர்கள் தங்களை சுதாரித்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே பல எதிர்ப்புகளை எதிர்நோக்கி உள்ளவனாக எனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இந்தச் செய்தி தொகுப்பை எழுதுகிறேன். ஆனாலும் நான் எதிலே தவறினேனோ அதை எனக்கு தெரியப்படுத்துங்கள், நான் உணர்வடைவேன். நான் **குற்றம் கண்டுபிடிப்போனா அல்லது சபையை பக்திவிருத்தி அடையச் செய்வோனா?** என்ற செய்தி தொகுப்பைப்பெற்று என் ஊழியத்தை நிதானித்துக் கொள்ளுங்கள். பாருங்கள் காவற்காரன் பட்டயம் வருகிறதைக் கண்டும், அவன் எக்காளம் ஊதாமலும், ஜனங்கள் எச்சரிக்கப்படாமலும் பட்டயம் வந்து அவர்களில் யாதொருவனை வாரிக் கொள்ளுகிறது உண்டானால், அவன் தன் அக்கிரமத்திலே வாரிக்கொள்ளப்பட்டான். ஆனாலும் அவன் இரத்தப்பலியைக் காவற்காரன் கையிலே கேட்பேன் என்று கர்த்தர் உரைக்கிறார். எசே.33:6

2. அப்போஸ்தலனாகிய பவுல், எபேசு பட்டணத்திலே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று (அப்.19:5) சபையாக் கூடிவரும் சிறுமந்தையின் மூப்பர்களை நோக்கி: (அப்.20:17) நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பிச் சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன் எனக்கூறியதாக அப்.20:29&30 வசனங்களில் வாசிக்கிறோம். பாருங்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று (அப்.2:38&41), இரட்சிக்கப்பட்டு சபையாகக் கூடிவருகிறவர்களுக்குள் (அப்.2:47) வெளியிலிருந்து ஓநாய்கள் வருகிறது என்றும், மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று சிறுசபையாக கூடி வருகிறவர்களுக்குள்ளும் சிலர் எழும்பி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று பவுல் கூறுகிறான்.

3. இங்கு அப்போஸ்தலனாகிய பவுல், தனக்குப் பிறகு, தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபைக்குள் (அப்.20:28) சத்துரு நுழைந்து களைகளை விதைப்பான் (மத்.13:25) என்றும், மேலும் சபைக்குள்ளிருந்தும் சிலர் எழும்பி மாறுபாடானவைகளைப் போதித்து, அநேகரை சத்தியத்தை விட்டு விலகச்செய்து, விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுவார்கள் (2 தீமோ.2:18) என சபையை எச்சரிக்கிறான்.

4. அதாவது சபைக்குள் ஒளியின் தூதனுடைய வேஷத்ததைத் தரித்த கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் அப்போஸ்தலர்கள், தீர்க்கத்தரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் போன்ற ஊழியங்களின் வாயிலாக நுழைந்து , கோதுமைக்குள் களைகளை விதைப்பார்கள் என்றும், இவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்களைத் தந்திரமாய் சபைக்குள் நுழையப்பண்ணி, ஆதியிலே சாத்தான் ஏவாளை வஞ்சித்தது போன்று , தந்திரமான , நயவசனிப்பான வார்த்தைகளால் விசுவாசிகளை தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்வார்கள் என்றும் , இவர்களை சபையில் அநேகர் பின்பற்றுவார்கள் என்றும் , இவர்களால் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும் என்றும் கூறுகிறான். (2 கொரி.11:13-15,2 பேது.2:1-3) **அதாவது இவர்கள் வெளிப்பாடு எனக்கூறிக்கொண்டு , தேவனுடைய வார்த்தையோடு , அந்தந்த காலத்துக்குரிய செய்திகளோடு தங்கள் சுயகருத்துக்களைச் சேர்த்து தேவனுடைய வார்த்தையை, அந்தந்த சபைக்காலச் செய்தியை தங்கள் சுயநோக்கத்திற்கேற்றவாறு அமைத்து மக்களை ஏமாற்றுகிறார்கள்.** இவ்வாறாக எதிராளியாகிய பிசாசானவன் மக்களுக்கு தேவனுடைய வார்த்தை, அக்காலத்திற்குரிய செய்தி மீதுள்ள நம்பிக்கையை அவனுடைய ஊழியக்காரர்களாகிய மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் மூலம் சீர்குலைத்துப் போடுவான் என எச்சரிக்கிறான்.

5. நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் காலம் கொடிதான வஞ்சிப்பின் காலம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை நேரத்தில் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அனுப்புவார் என 2 தெச.2:1,11&12 வசனங்களில் வாசிக்கிறோம். ஆம், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலம் சபைகாலங்களில் மிக மிகக் கொடிதான வஞ்சிப்பின் காலம். இக்காலம் குறித்து நாம் செய்தியில் வாசிப்பது என்ன? சத்துரு நம்மை வஞ்சிக்கும் இந்நாட்கள் போன்று இதுவரை எக்காலத்திலும் இருந்ததில்லை. இது பிசாசின் தந்திரமும், வஞ்சகமும் நிறைந்த நாட்களாகும். இந்நாட்களில் கிறிஸ்தவர்கள் முற்காலங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை காட்டிலும் அதிக கவனமாக இருக்க வேண்டியது அவசியம். (**சாத்தானின் ஏதேன்**, பக்கம் 7, கடைசி பத்தி) தற்காலத்திலோ பிசாசின் வஞ்சகம் கிறிஸ்தவர்கள் அல்லாதோர் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று நம்பும்படி செய்கிறது. (**சாத்தானின் ஏதேன்**,பக்கம்8,பத்தி 2). இது, இதுவரை ஜீவித்த மனிதர்களில் எக்காலத்திலும் இல்லாத மிகுந்த நயவஞ்சகக் காலம். இதுவரையிலும் இல்லாத மிகுந்த வஞ்சகம். (**தாகம்**, பத்தி 101)

6. மக்களை மோசம் போக்குகிறவன் யார்? சாத்தான் (ஆதி.3:13,அப்.5:3). சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்து மக்களை மோசம் போக்குகிறான். அவனுடைய ஊழியக்காரர்கள் நீதியின் ஊழியக்காரர்கள்போல் வேஷம் தரித்து விசுவாசிகளை மோசம் போக்குகிறார்கள். இவனுடைய ஊழியக்காரர்கள் தான் மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் ஆகும்.

7. இப்பொழுது மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் எங்கே? தென்இந்திய திருச்சபைக்குள்ளா? இல்லை. அசெம்ளி ஆப் காட் சபைக்குள்ளா? இல்லவேயில்லை. அப்படியானால் தி பெந்தெகொஸ்தே சபைக்குள்ளா? கிடையாது. இந்த உலகத்தில் கிறிஸ்துவின் பெயரில் ஆயிரக்கணக்கான ஸ்தாபன சபைகள் உண்டு. அவைகளுக்குள்ளா? கிடையவேகிடையாது. அப்படியானால் அவைகள் எங்கே? அவைகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று (அப்.2:38) இரட்சிக்கப்பட்டு ஆங்காங்கே சிறுசிறு மந்தையாகக் கூடி (அப்.2:47) அப்போஸ்தல தீர்க்கத்தரிசிகளின் உபதேசம் (எபே.2:20) மற்றும் அந்தந்த காலத்துக்குரிய செய்தியில் நிலைத்திருந்து தேவனை ஆராதித்து வரும் சபைக்குள்ளே நுழைந்து சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிறவர்களை வஞ்சித்துக்கொண்டிருக்கிறது.

8. ஸ்தாபனம் கத்தோலிக்கச் சபையினால் உண்டாக்கப்பட்டது. அதன்பிறகுதான் பற்பல ஸ்தாபனங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. ஆனால் ஸ்தாபனங்கள் தேவனால் உண்டாக்கப்பட்டதோ அல்லது தேவனால் நியமிக்கப்பட்டதோ அல்ல என்றும் , அது பிசாசினால் நியமிக்கப்பட்டதென்றும் நீங்கள் காணவேண்டுமென்று விரும்புகிறேன். (**நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல**) தேவனால் அனுப்பப்பட்ட மனிதன் எவனும் ---- ஸ்தாபனத்தில் தங்கியிருக்க மாட்டான். (மேற்கூறிய செய்தியில் பக்கம் 116, பத்தி 1) **இயேசு மாத்திரம்** ஸ்தாபனத்தில் அருமையான சகோதரர்கள் உள்ளனர். அவ்வாறே அசெம்ளி ஆப் காட் , பாப்டிஸ்ட், பிரஸ்பிட்டேரியன் , கத்தோலிக்க ஸ்தாபனங்களிலும் அருமையானவர்கள் அநேகர் உள்ளனர். ஆனால் அவை எதுவுமே உண்மையான சபையல்ல. அவைகளில் உள்ள தனிப்பட்ட நபர்கள் சிலர் உண்மையான சபையைச் சார்ந்தவர்கள். (நான் ஏன் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கத்துக்கு விரோதமாயுள்ளேன்)

9. நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நான் பாப்டிஸ்ட் சபையைச் சார்ந்தவன்.
நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நான் மெத்தடிஸ்ட் சபையைச் சேர்ந்தவன்.
நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நான் பெந்தெகொஸ்தே சபையைச் சார்ந்தவன்.
இப்பொழுது பாருங்கள், இது தேவனுக்கு ஒரு காரியம் அல்ல. நீங்கள் தவறான திறவுகோலை வைத்துக்கொண்டு துளாவிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஒரு சரியான திறவுகோல் உண்டு. மெத்தடிஸ்ட் சபையிலோ அல்லது பாப்டிஸ்ட் சபையிலோ அல்லது பெந்தெகொஸ்தே சபையிலோ அல்லது மற்றெந்த ஸ்தாபன சபையிலோ தேவன் உங்களைச் சந்திப்பதாக வாக்களிக்கவில்லை. அவர் ஸ்தாபனங்களை ஒரு பொருட்டாகக் கருதுவது கிடையாது. அவைகள் அவருக்கு எதிராக இருக்கின்றன. (**தேவனால் அருளப்பட்ட ஒரே ஆராதனை ஸ்தலம்**. பத்தி 53&54) பாருங்கள், ஸ்தாபன சபைகள் எதுவும் தேவனால் உண்டாக்கப்பட்டதோ அல்லது நியமிக்கப்பட்டதோ இல்லை. அவைகள் யாவும் பிசாசினால் நியமிக்கப்பட்டது. ஆதலால் பிசாசுக்கு அங்கு வேலை எதுவும் கிடையாது. அவனுக்கு மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, இரட்சிக்கப்பட்டு, ஆங்காங்கே சிறு மந்தையாகக் கூடி வரும் தேவன் தம் சுய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையிலே முழுநேர ஊழியமாகும்.

10. மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் பற்பல பெயர்களில் அழைக்கப்படுகிறன. அவைகளில் சில :

அ. பொய்யன். யோ.8:44
ஆ. வஞ்சகன். 2 யோ:7
இ. மோசம் போக்குகிறவன். எபே.5:6, வெளி.12:9
ஈ. கள்ளப்போதகன். 2பேது.2:1
உ. கள்ளத்தீர்க்கத்தரிசி. மத்.24:4
ஊ. கள்ளக்கிறிஸ்து. மத் 24:24

எ. எத்தன். 2 தீமோ 3:13
ஏ. கள்ள, கபடமுள்ள வேலையாட்கள். 2கொரி 11:13
ஐ. நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத்தரித்தவர்கள். 2கொரி 11:15
ஒ. ஒளியின் தூதனுடைய வேஷத்தைத்தரித்தவர்கள். 2 கொரி 11:14
ஓ. கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களின் வேஷத்தைத்தரித்தவர்கள். 2கொரி 11:13
ஔ. மாய்மால தந்திரசாலிகள். கொலோ.2:8
ஃ. நயவசனிப்புக்காரர்கள். கொலோ. 2:4
க. கெர்ச்சிக்கும் சிங்கம். 1பேது. 5:8
கா. லௌகீக ஞானத்தையுடையவர்கள். கொலோ. 2:8

11. இப்பொழுது இவர்கள் எவ்வாறு மாறுபாடானவைகளைப் போதித்து மக்களை சத்தியமார்க்கத்தை விட்டு வழிவிலகச்செய்கிறார்கள் என்பதைக் குறித்து காண்போம்.
குழியில் இறங்குகிறவர்கள் ஏழாம் தூதனை , அதாவது லவோதிக்கேயா சபைக்காலத்தூதனை, இருபதாம் நூற்றாண்டு தீர்க்கத்தரிசியாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காமை **கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து** என அழைக்கிறார்கள். ஆனால் தான் **கிறிஸ்து** என அழைக்கப்படுவது குறித்து சகோ.பிரன்காம் என்ன கூறுகிறார்?
நான் ஊழியத்தைவிட்டு விலகுகிறேன் என்று கூறும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுள்ளேன். ஏனென்றால் , ஜனங்கள் மத்தியில் ஒரு காரியம் எழும்பியுள்ளது. அதுவே நான் அவ்வாறு கூறும்படி செய்திருக்கிறது. அதென்னவென்றால், நான் **ஊழியக்காரன்** அல்லது ஒரு **சகோதரன்** என்று அழைக்கப்படும் அடைப்புக்குறியிலிருந்து எடுக்கப்பட்டு **இயேசு கிறிஸ்து** என்று அழைக்கப்படுகிறேன். அப்படியாக என்னை அழைப்பது எனக்கு **அந்திக்கிறிஸ்து** என்ற பட்டத்தைச் சூட்டிவிடும் நான் அவரை ஒரு அந்திக்கிறிஸ்துவாக சந்தித்து அவரைவிட்டு அகற்றப்படுவதற்கு முன், ஊழியத்தைவிட்டு விலகி ஓடிப்போனவனாகவே சந்திக்க விரும்புகிறேன். ---- நான் **கிறிஸ்து** என்று கூறுகிறதான எல்லாவிதமான கடிதங்களும், தொலைபேசி அழைப்புமூலம் கூறுவதும் கடந்தசில நாட்களில் எனக்கு வந்துள்ளன. சகோதரரே, அது பிசாசினுடைய பயங்கரமான , வெட்கக்கேடான , தேவபக்தியற்ற ஒரு பொய்யாகும். ---- அப்போதகம் சத்தியத்திற்கு விரோதமான , நெறிபிறண்டதாக இருக்கிறது. அது பொய்யானதாக இருக்கிறது. **கர்த்தர் உரைக்கிறார்.** அது முறைகேடானதாக இருக்கிறது. அப்படிப்பட்டதோடு எந்தவிதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளாதீர்கள். நான் உங்களுடைய சகோதரன் எனக் கூறுகிறார். (**இயேசு கிறிஸ்துவைப் பற்றின வெளிப்படுத்துதல்**, பக்கம் 1209, 1211, பத்தி 25&30: பக்கம் 1204, பத்தி 44)

12. பாருங்கள் **கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து** உபதேசம் பிசாசினுடையது. இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல. அதோடு ஒரு உண்மையான கிறிஸ்தவன் சம்பந்தம் வைத்துக்கொள்ளமாட்டான். அது ஒருவனை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் தன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் , முழு மனதோடும் , முழு பலத்தோடும் அன்புகூர்ந்து , அவருடைய சத்தத்தைக் கேட்டு , அவரை சேவித்து , அவரைப்பற்றிக்கொண்டிருப்பதற்கு விடாது, அவரிடமிருந்து அவனைப் புறம்பாக்கும் சாத்தானின் திட்டமாகும்.

13. இதோடுமட்டுமல்ல, இன்னும் சகோ.பிரன்காம் அவருடைய ஊழியத்தைக் குறித்து கூறுவதைக் கவனியுங்கள்.
ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அந்த தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்துகிறார். இவ்விருவரும் யாரென்று இப்பொழுது புரிகிறதா? அதுதான் இதுவரை உங்களுக்கு புரிந்துகொள்ள முடியாத கடினமான செயலாய் இருந்து வருகிறது. ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவர் மக்களுக்கு மனுஷகுமாரன் யார் என்பதை வெளிப்படுத்துகிறார். இந்த அற்புதங்களையெல்லாம் செய்பவன் நான் அல்ல. அவர் இத்தகைய செயல்களை புரியும்போது நான் அவர் அருகில் இருக்கிறேன். அவர் என்னைத் தம் சத்தமாக உபயோகித்துவருகிறார். என் மூலம் அவர் பேசுவதற்கென என்னை நான் அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணித்துவிட்டேன். அது ஏழாம் தூதன் அல்ல! அது மனுஷகுமாரன் வெளிப்படுதலாகும். அது **தூதன் அல்ல, அவனுடையச் செய்தி** (**அவனுடைய செய்தி** என்கிற வார்த்தையை சாத்தான் தமிழ் மொழிப்பெயர்ப்பிலிருந்து எடுத்துப்போட்டுவிட்டான்) மறைபொருளாயிருந்த தேவனுடைய ரகசியம் வெளிப்படுதலாகும். அது மனிதன் அல்ல. அது தேவன். **தூதன் மனுஷகுமாரன் அல்ல.** ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன். **மனுஷகுமாரன் என்பது கிறிஸ்து** (கடைசி காலத்தில் **ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்** , புதிய பதிப்பு , பக்கம் 91 , பத்தி 260 : பக்கம் 94, பத்தி 269)

14. பாருங்கள், ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. அவர் மனுஷகுமாரனை வெளிப்படுத்துகிறார். கலா.1.16. மனுஷகுமாரன் கிறிஸ்து. சகோ.பிரன்காம் ஏழாம் தூதன். இந்தத் தூதனை **கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து** என அறிக்கையிட்டு உபதேசிப்பவர்கள் மேல் ஆக்கினை வரும். அவர்கள் தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக்கொண்டார்கள். நானும் என்வீட்டாருமோவென்றால் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்போம் எனக் கூறும் இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூறாததினால் சபிக்கப்பட்டவர்கள். 1கொரி.16:22 தேவனுடைய சத்தியத்தை இவர்கள் பொய்யாய் மாற்றி சிருஷ்டிகரை தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவிப்பதனால் இவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்பட்டுவருகிறது. பிரியமானவர்களே, உங்களை இவர்கள் மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்.

15. ஏழாம் சபைக்காலத் தூதன் சகோ.வில்லியம் மரியன் பிரன்காம் கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடி , கர்த்தருடைய முதலாம் வருகைக்கு யோவான்ஸ்நானகன் முன்னோடியாக இருந்து மணவாட்டியை அவருக்கு அறிமுகப்படுத்தினான். அவ்வண்ணமாகவே சகோ.பிரன்காம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருந்து , கிறிஸ்து 1963,பிப்ரவரி மாதம் 28ம் தேதி சூரிய அஸ்தமன மலையில் இறங்க , மணவாட்டியை அவருக்கு அறிமுகப்படுத்திவிட்டார் என்ற தவறான போதனை நம் மத்தியில் உண்டு.

16. 1933ம் ஆண்டு , ஜுன் மாதம் , 15ம் தேதி மதியம் சகோ.பிரன்காம் , அமெரிக்காவில் ஓகியோ நதிக்கரையில் சுமார் 500 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்க நின்றுகொண்டிருந்தார். மதியம் சுமார் 2 மணிக்கு , பதினேழாவது நபருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சமயம் **மேலே பார்** என்ற சத்தத்தைக் கேட்டார். அப்பொழுது தேவன் அக்கினிஸ்தம்பத்தில் காட்சியளித்தார். தேவன் இறங்கினார். **யோவான்ஸ்நானகன் எப்படி கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டது போல , உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் சென்று உலகத்தில் எல்லா பாகங்களுக்கும் போகும் என விளம்பிற்று.**
( **இந்த வேதவாக்கியம் இன்றையத் தினம் நிறைவேறிற்று**, பத்தி 143 & 144)

17. உங்களுக்கு அது ஞாபகமுள்ளதா? கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான்ஸ்நானகன் அனுப்பப்பட்டதுபோல , **உன் செய்தி** ---- கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருப்பது இந்தச் செய்தியே. அப்படியே கர்த்தருடைய தூதன் உரைத்தான். (கே.ப.2:12,பக்கம் 100, பத்தி 384)

18. A voice came that shook all around the places there, said, As John, the Baptist was sent to forerun the first coming of Christ, the Message that is given you will be forerunning of the Second Coming of Christ, **not that I would be a forerunner, but the Message was the forerunning.** (**Testimony William Branham**, Sun. Juen P.R.Wednesday 02.10.1960)

19. பாருங்கள், ஏழாம் தூதன் கர்த்தருடைய வருகைக்கு முன்னோடி அல்ல. அவருக்கு தேவன் கொடுத்த செய்தியே கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடி. இது 1தெச.4:16ல் கூறப்பட்ட **ஆரவாரம். இது இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம்** மத்.25:6 இந்த செய்தியைக் கேட்டு புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகள் தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தும் நேரம் மத்.25:7. இது மல்.4அதி.யின்படி தேவன் பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களுடைய இருதயத்திற்கு திருப்ப கொடுக்கப்பட்ட செய்தி.

20. ஏழாம் தூதன் இன்று நம் மத்தியில் இல்லை. அவர் மரித்தோர் உயிர்தெழும் நாளில் உயிர்தெழும்புவார். ஆனால் தேவன் அவர் மூலமாக மணவாட்டிக்குக் கொடுத்தச் செய்தி, இன்னும் நம் மத்தியில் இருந்து அவளை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆதலால் ஏழாம் தூதன் கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடி என்ற மாறுபாடான போதனையை கொண்டு வருகிறவர்கள் மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்களே.

21. C.W. வுட் (wood) என்பவர் பிப்ரவரி மாதம் 28ம் தேதி, 1963வது ஆண்டு அமெரிக்காவில் அரிசோணா மாநிலத்தில் டக்சன் (Tucson) என்ற இடத்திலிருந்து வடக்கு நாற்பது மைல் தூரத்தில் உள்ள கொரோனடோ (Coronado) காட்டில் சூரிய அஸ்தமன மலையின் சிகரத்தில் கிறிஸ்து பூமிக்கு வந்து (வெளி.10:1) சகோ.பிரன்காம் சரீரத்தில் இறங்கினார் என்று போதிக்கிறார். இந்த சம்பவம் குறித்து நாம் செய்தியில் காண்பது என்ன? 1962ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் தேதி காலை 10 மணியளவில் இந்தியானாவில் உள்ள தனது அறையில் சகோ.பிரன்காம் கண்ட தரிசனத்தின்படி 1963ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி சூரிய அஸ்தமன மலை மீது ஏழு தேவ தூதர்கள் சகோ.பிரன்காம் முன் தோன்றி, பின் ஒரு வினோதமான மேகம் 30 மைல் உயரம் 25/27 மைல் விட்டத்தில் கூர்நுனிக்கோபுரம் வடிவில் உண்டாகக் காரணமாயிருந்தனர். இந்த தூதர்கள் ஏழு முத்திரைகளின் இரகசியத்தை சகோ.பிரன்காமுக்கு வெளிப்படுத்திக்காட்ட, அவர் அதை பிரசங்கித்தார். இந்த ஏழு தூதர்களின் தோற்றத்தை **விஞ்ஞானம்** என்ற பத்திரிக்கை தன் மேல் அட்டையில் 1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் தேதியும், **லைப்** என்ற பத்திரிக்கை 1963ம் ஆண்டு மே மாதம் 17ம் தேதியும் வெளியிட்டன.

22. இதோடு மட்டுமல்ல, இவர் ஏழாம் தூதனை வார்த்தையை பரிபூரணமாகக் கொண்ட தீர்க்கத்தரிசி (Full Word Prophet) என்கிறார். இவரது போதனைகள் சாத்தானுடைய கொடிதான வஞ்சகமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து ஒருவரே வார்த்தையை பரிபூரணமாகக் கொண்ட தீர்க்கத்தரிசி. சகோ.பிரன்காம் இயேசு கிறிஸ்து என்ற உபதேசத்தை இவர் மறைமுகமாக பறைசாற்றுகிறாரோ?

23. இவரது உபதேசம் மனிதன் சந்திரனில் காலடி வைத்த 20-07-1969 அன்று சர்வ வல்லமையுள்ள தேவன் பூமிக்கு வந்து R.P.லாரியின் சரீரத்தில் இறங்கினார் என்ற உபதேசத்துக்கு இணையான ஒரு மாறுபாடான உபதேசம். இவர் தன்னை 1967ல் இருந்து செய்தியில் இருப்பதாகக் கூறினாலும், இவர் ஒரு கள்ளப்போதகரே.

24. மேலும் இவர் தீர்க்கத்தரிசி தன் மாமிச சரீரத்தில் இருந்து கொண்டு, சூரிய அஸ்தமன மலைச் சிகரத்தில் தன் தியாபணி சரீரத்தை கண்டார் என தன் மனம் போன போக்கில் மாறுபாடானவைகளை போதிக்கிறார். அதாவது ஒரே நேரத்தில் இரு வித்தியாசமான சரீரத்தில் தீர்க்கத்தரிசி இருந்தார் என்கிறார். இவர் ஏழு தூதர்களும், ஏழு சபைக்கால தூதர்கள், ஆதலால் ஏழாவது தூதன் சகோ.பிரன்காம் என்கிறார். இங்கு சற்று சிந்தியுங்கள். முதலாம் மற்றும் கடைசி சபைக்காலங்கள் தவிர இதரசபைக்கால தூதர்கள் யாவரும் சீர்திருத்தக்காரர்கள். அந்த ஏழு தூதர்களும் தேவ தூதர்கள். இது குறித்து ஏழு சபைக்காலங்களில் இருந்த ஏழு தூதர்கள் யார் என்பதை வெளிப்படுத்த அவர் இப்பொழுது ஏழு தேவ தூதர்களை அனுப்பினார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தேவதூதன் தோன்றி லூத்தர், வெஸ்லி பெந்தெகொஸ்தேயினர் விட்டுச்சென்ற தளர்ந்த முனைகளை வெளிப்படுத்திக்கொடுத்தனர் எனக் கூறுகிறார் ( **ஷாலோம்**, பத்தி 158) அந்த ஏழு தூதர்கள் பூமிக்குரிய தூதர்கள் அல்ல (Earthly angels) அவர்கள் தேவதூதர்கள் (Heavenly Angels) இதுகுறித்து **ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்** செய்தியில் பக்கம் 48, பத்தி 1ல் அவர்கள் தேவதூதர்கள் எனக் காணலாம். அன்று காலை எனக்கு முன்னமே அறிவிக்கப்பட்டிருந்த அதே இடத்தில், ஏழு தூதர்கள் பரலோகத்தில் இருந்து இறங்கி வந்தனர். அவர்கள் சுழற்காற்றில் மேலே சென்றதை நாங்கள் கண்கூடாகக்கண்டோம். விஞ்ஞானமும் அதை புகைப்படம் எடுத்தது. எல்லா நாடுகளுக்கும் அது சென்றது. ஆதலால் சகோ.பரன்காம் சூரிய அஸ்தமன மலையில் தன் தியாபணி சரீரத்தை கண்டார் என்பது மாறுபாடான போதனை. மேலும் நீங்கள் கே.ப.381ல் பத்தி 58ஐ தியானியுங்கள். ஒரே நேரத்தில் ஒருவர் இரு சரீரத்தில் இருக்கமுடியாது என்பதை காணலாம். ஆனால் ஒரே நேரத்தில் இரு சுபாவத்தை நீங்கள் கொண்டிருக்க முடியும் எனக் கூறுகிறார். மேலும் இதுகுறித்து நீங்கள் தியானிக்க விரும்பினால் **ஸ்திரீ** செய்தித் தொகுப்பைப் பெற்று பயன் பெறுங்கள்.

25. மேலும் இவர் வெளி.19:10 மற்றும் 22:8 & 9ல் யோவான் பாதத்தில் விழுந்து வணங்கிய தூதன் ஏழாம் சபைகாலத் தூதன், அதாவது சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் என்று உபதேசிக்கிறார். நான் சென்னையில் இதுகுறித்து பிரஸ்தாபமான ஊழியர்கள் பலரை சந்தித்துப் பேசினேன். அவர்கள் யாவரும் இந்த உபதேசம் சரியே என்று கூறினர். ஆனால் எனக்கு அதில் ஒருமனப்பாடு கிடைக்கவில்லை. ஏனென்றால் முதலாவது யோவான் யார் பாதத்தில் விழுந்தானோ அந்த தூதன் யோவானுக்கு உடன் ஊழியக்காரன். (I am thy fellow servant ) இது எப்படியெனில், பொதுவாக 5 வகை ஊழியத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் பணிகளில் வித்தியாசப்பட்டாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் உடன் ஊழியக்காரர்கள். அதுபோன்று அந்த தூதன், தன் பாதத்தில் விழுந்து வணங்கிய யோவானை தன் உடன் ஊழியக்காரன் என்று அழைக்கிறான். ஏனென்றால் யோவான் அப்போஸ்தலன் மற்றும் தீர்க்கத்தரிசி. அந்தத் தூதன் ஒரு தீர்க்கத்தரிசி.

26. இரண்டாவதாக அந்த தூதன் யோவானிடம் நான் உன் சகோதர தீர்க்கத்தரிசிகளோடு ஒரு ஊழியக்காரன் (I am thy brethren , the prophet) என்கிறான். இதிலிருந்து அந்த தூதன் ஒரு தீர்க்கத்தரிசி எனத் தெரிகிறது. மேலும் அந்த தூதன் யோவானை உடன் சகோதரர்களில் ஒருவன் எனக் கூறுகிறான். அப்படியானால் அந்த தூதனும் யோவானைப் போன்று யூதகுலத்தில் பிறந்து வளர்ந்தவனாக இருக்க வேண்டும். ஆதலால் அந்த தூதன் ஒரு புறஜாதி தீர்க்கத்தரிசியாக இருக்க முடியாது.

27. இங்கு உபா.18:15 & 18 வசனங்களை தியானியுங்கள். ஒரு தீர்க்கத்தரிசி உன் நடுவே, உன் சகோதரரிலிருந்து என்னைப்போல (A prophet from the midst of thee, of thy brethren, like unto me.) அதாவது மோசேயைப் போல ஒரு தீர்க்கத்தரிசி, யூத ஜனங்கள் மத்தியிலிருந்து, அவனுடைய சகோதரர்களிலிருந்து எனப் பொருள்படும். யூதர்களில் ஒவ்வொருவரும் அவர்களுக்குள் சகோதரர்கள். ஆனால் சகோ.பிரன்காம் ஒரு புற ஜாதி தீர்க்கத்தரிசி என்பதை மறந்துவிடக்கூடாது. இவர் நமக்கு சகோதரன். ஆனால் இவர் யோவானுக்கு சகோதரனாக முடியாது. ஆனால் உடன் ஊழியக்காரனாக இருக்கலாம்.

28. அடுத்து உன்னைப்போல் ஒரு தீர்க்கத்தரிசியை நான் அவர்கள் சகோதரரிலிருந்து (A prophet from among their brethren , like unto me ) பாருங்கள் யூத ஜனங்கள் மத்தியில், அவர்கள் சகோதரர்களிலிருந்து ஒரு தீர்க்கத்தரிசி. இது குறித்து நீங்கள் யோ.4:9ல் இயேசு ஒரு யூதன் (Jew) என்றும் , அவர் கலிலேயாவிலுள்ள நாசரேத் ஊரிலிருந்து வந்த தீர்க்கத்தரிசி (மத்.21:11) என்றும், ரோ.9:5ல் மாம்சத்தின்படி கிறிஸ்து இஸ்ரவேலர் என்றும் காண்கிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் யூதர் என்று அழைக்கப்பட்டனர் (2இரா.16:6) சகோ.பிரன்காம் ஏழாம் சபைகாலத் தூதன். ஆனால் இந்த ஏழாம் சபைகாலத் தூதன் ஒரு புற ஜாதி தீர்க்கத்தரிசி. இவர் யூத ஜனங்களின் மத்தியில் இருந்து எழுந்த தீர்க்கத்தரிசி அல்ல. மேலும் யோவானின் இனத்தான் அல்ல. யூதர்களுக்குள் யோவானுக்கு சகோதரனும் அல்ல.

29. மூன்றாவதாக அந்த தூதன் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சியிட்ட யோவானின் சகோதரரோடு கூட ஒரு ஊழியக்காரன் (And of thy brethren, that have the testimony of Jesus) இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி தீர்க்கத்தரிசனத்தின் ஆவியாயிருக்கிறது. (The testimony of Jesus is the spirit of prophecy ) இங்கு நாம் 1பேது.1:10&11 வசனங்களை தியானிக்க மறந்துவிடக்கூடாது. இந்த தூதன் யாரென்றால், அவன் தன்னிலுள்ள கிறிஸ்துவின் ஆவியினால் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப்பின் வரும் மகிமையையும்

முன்னறிவித்த தீர்க்கத்தரிசியாக இருக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல நமக்கு உண்டான கிருபையை குறித்து தீர்க்கத்தரிசனம் சொன்ன தீர்க்கத்தரிசியாகவும் இருக்க வேண்டும்.

30. ஆனால் சகோ.பிரன்காம் லவோதிக்கேயா சபைதூதன். இவர் கிறிஸ்துவுக்கு உண்டான பாடுகளைப்பற்றியும் , அதற்குப்பின்வரும் மகிமையையும் , நமக்கு உண்டான கிருபையையும் குறித்து முன்னறிவித்து தீர்க்கத்தரிசனம் கூறின தீர்க்கத்தரிசி அல்லவே அல்ல. இது குறித்து செய்தி என்ன கூறுகிறது? இது அவர் தம்முடைய தூதனை அனுப்பி யோவானுக்கு தெரியப்படுத்தினார். அந்த தூதன் யார் என்பது நமக்குத் தெரியாது. அந்த தூதன் யார் என்பதைப்பற்றி வேதமும் ஒன்றும் கூறவில்லை. ஆனால் அந்த தூதன் ஒரு தீர்க்கத்தரிசி என்று நாம் அறிந்திருக்கிறோம்.---- அது எலியாவாக இருக்கக்கூடும். தீர்க்கத்தரிசிகளில் ஒருவனாக இருக்கக்கூடும். யோவான் அப்போஸ்தலனாக இருந்தான். ( **இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்**, பாகம் 1, பக்கம் 29, பத்தி 112 & 113) அது எலியாவாக இருக்கக்கூடும் எனத் தீர்க்கத்தரிசி கூறுவதால், நீங்கள் சகோ.பிரன்காம் எலியாவின் ஆவியை உடையவர்தானே என்று நீங்கள் வாக்குவாதம் செய்யக்கூடாது. ஏனென்றால் ஒரேவிதமான ஊழியத்தைக் குறிக்க இது **எலியாவின் ஆவி** என்று அழைக்கப்படுகிறது. தேவஆவியானவர் வல்லமையாக எலியாவின் மேல் தங்கியிருந்தார். அதே ஆவியானவர் இரட்டிப்பான வல்லமையோடு எலிசாவின் மேல் அமர்ந்தார். நூற்றாண்டுகள் கழித்து இந்த எலியாவின் ஆவி யோவான்ஸ்நானகன் மேல் இறங்கியது. புறஜாதிகளின் சபைக்காலம் முடிவடையும் தருனத்தில் எலியாவின் ஆவி ஒரு மனிதன் மேல் இறங்கி அதேவிதமான ஊழியத்தைக்கொடுக்கும் (**ஏழு சபைக்கால வியாக்கியானம்**, பக்கம் 309, பத்தி 2)

31. ஆதலால் தான் தீர்க்கத்தரிசி கே.ப.189ல் இவ்விதமாகக் கூறுகிறார். And the man of the Seventh Angel Messenger at the end of the Laodicean Age, **will not the literal Elijah, he'll be a gentile to his people.** பாருங்கள் தீர்க்கத்தரிசி நான் சொல்லுக்குச் சொல் சரியான (literal) எலியா கிடையாது, நான் ஒரு புறஜாதி என்கிறார்.

32. Keep your skirts clean என்ற ஒரு பழமொழி உண்டு. அதன் அர்த்தம் என்னவென்றால் **சந்தேகமுள்ள காரியங்களில் தடையிடாதே** என்பதே. இவைகளில் தடையிட வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தாலும், மற்றவர்கள் இவைகளில் சிக்கவைக்க முயற்சித்தாலும், இவைகளைவிட்டு விலகி நேரான பாதையில் நாம் செல்லவேண்டும். ஆதலால் தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தி எங்கு அமைதலோ அங்கு நாமும் அமைதியை கடைபிடிப்போம். ஏனென்றால் செய்தியானது சபையின் தலைவனுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. (**இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்**, பக்கம் 460, பத்தி 289) மேலும் சபைக்காலத்தில் ஏழாம் தூதனின் செய்தியே கடைசி செய்தியாகும். (ஷாலோம், பத்தி 170) ஆதலால் சகோ.C.W.வுட் - அமெரிக்கா, சகோ.புதுக்கோட்டை ஜெயராஜ் - இந்தியா, சகோ.ரிச்சர்ட் ஹன் - சிங்கப்பூர் ஆகியோரது செய்தி நமக்கு தேவையில்லை. ஏனென்றால் அவர்களுக்கு இக்காலத்துக்குரிய செய்தி கொடுக்கப்படவில்லை. இதிலிருந்து வெளி.19:10, வெளி.22:8 & 9 ல் யோவான் பாதத்தில் விழுந்து வணங்கிய தீர்க்கத்தரிசி ஏழாம் சபை தூதன் அல்ல. அவன் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் எழுந்த ஒரு யூத தீர்க்கத்தரிசியாவான். அவன் ஒரு புற ஜாதி தீர்க்கத்தரிசி அல்ல என்பது தெரியவரும்.

33. இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மை பாராட்டுகிற இவர்கள் எதற்கெடுத்தாலும் பிரன்காம் , பிரன்காம் எனக் கூறிக்கொண்டு , தேவனுக்குக் கொடுக்கும் மகிமையை விட, சகோ.பிரன்காமுக்கு அதிக மகிமையைக் கொடுத்து, சகோ.பிரன்காமை தேவனுக்கு மிஞ்சி தலையில் தூக்கிவைத்து ஆடிக்கொண்டிருக்கும் ஊழியக்காரர்கள் நிச்சயமாக ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே. இவர்கள் பரிசுத்த வேதாகமத்தை மறந்து, அதை தியானிக்க மறந்து, எப்பொழுதும் செய்தி, செய்தியென தாரை ஊதிக்கொண்டிருக்கிறவர்களும் நம்மை மோசம்போக்குகிறவர்களே. சாத்தான் இவர்களைக் கொண்டு சத்தியத்தைப் புறக்கணித்து நயவஞ்சகமான முறையில் மாறுபாடானவைகளை உபதேசித்து ஒருவனுடைய விசுவாசத்தை கவிழ்த்துப்போடுகிறான். 2 தீமோ.2:17 & 18. முடிவாக சகோ.C.W. வுட் என்பவரின் போதகத்தைக் குறித்தும், வெளி.10:9 & 22:8 & 9ல் கூறப்பட்டுள்ள தூதன் சகோ.பிரன்காம் , ஏழாம் சபைக்கால தூதனாகிய பிரன்காமை வணங்கும்படி அப்போஸ்தலனாகிய யோவான் அவர் பாதத்தில் விழுந்தான் என்ற உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருங்கள். இது ஞானமென்று பொய்யாய்ப் பெயர்பெற்றிருக்கிற ஒரு விபரீதமான போதனையாகும்.

34. இன்று இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் எனக் கூறுபவர்களில் பலர் ஹா∴ப்மன் என்பவர் வரைந்த **இயேசு 33,** அதாவது இயேசு தன்னுடைய 33வது வயதில் எப்படியிருந்தார் என்பதை ஒரு படம் வரைந்துள்ளார். அதை தங்கள் இல்லத்தில் முகப்பு சுவற்றில் மாட்டிக்கொண்டு , விக்ரக ஆராதணை செய்து வருகின்றனர். அப்படியானால் இவர்களுக்கும் கிறிஸ்துவின் புகைப்படம் எனக் கூறி ஏதோ ஒரு படத்தை தங்கள் வீட்டு முகப்பில் தொங்கவிட்டுக்கொண்டு அதற்கு மெழுகுவர்த்தி கொழுத்தி, பூ மாலைகள் போட்டு ஆராதிக்கும் ஸ்தாபன சபை மக்களுக்கும் என்ன வித்தியாசம்?

35. இதுகுறித்து இவர்களிடம் கேட்டால் சகோ.பிரன்காம் தன் வீட்டு முகப்பில் வைத்துள்ளார், நாங்களும் வைத்துள்ளோம் எனக் கூறுகிறார்கள். இதுகுறித்து செய்தியில் நாம் வாசிப்பது

என்ன? ஒரு நாள் அதை (ஏழு தூதர்களின் தோற்றமுடைய புகைப்படம்) வலப்பக்கமாகத் திருப்பிப்பார்த்தேன். அதில் இயேசு கிறிஸ்துவை கண்டேன். அது ஹாஃப்மன் வரைந்த படத்தைப் போல மிகவும் தத்ரூபமாக இருந்தது.----- நீங்கள் அதை வலப்புறமாக சாய்த்து பக்கவாட்டில் அதைப் பாருங்கள். அவ்வண்ணமாகவே புகைப்படம் எடுத்ததுபோல தத்ரூபமாக இருக்கிறார். --- நான் அவரை முதன்முறையாக பார்த்தபோது அவர் ஹாஃப்மன் வரைந்த தலையைப்போல காணப்பட்டார். அதற்கு முன்பு நான் அதைப் பார்த்தது கிடையாது சில வருடங்களுக்கு பின்பு பில்லிசண்டே (Billy Sunday) கூடாத்தில் அதைப் பார்த்தேன். அன்றுமுதற்கொண்டு என் வீட்டில் அந்தப் படங்களில் ஒன்றாகிலும் இல்லாமல் இருந்ததில்லை. இதை நீங்கள் **ஏற்ற காலத்தின் ஆவிக்குரிய ஆகாரம்** என்ற செய்தியில் 84-86 பத்திகளில் வாசிக்கலாம் இதுகுறித்து இன்னும் நீங்கள் **தேவசித்தத்திற்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு சேவைசெய்தல்** (27.11.65 அன்று பிரசங்கிக்கப்பட்டது ) பத்தி 99,92 & 95ல் வாசிக்கலாம்.

36. மேலும் **His unfailing words of promise** என்ற செய்தியில் 125வது பக்கத்தில் கீழ்கண்டவாறு உள்ளது. Now the morning that I left, at our home , we always had to getup, and when we would go to pray: when we'd leave, we'd take the children and all of us, stand around towards the picture of Jesus, in our friend room, hofmann's Head of Christ at Thirty – Three. And we would all gather round there, the children, and each one of them would pray for me. The wife would pray for me and then I pray for her. Then I 'd go oversees , where ever it is. And we comitte our selfs to the Lord, for His service. இங்கு சகோ.பிரன்காம் தான் ஊழியத்தின் பாதையில் எங்கும் செல்லும் சமயம் தானும் தன் குடும்பத்தினர் அனைவரும் தன் வீட்டு முகப்பு அறையில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஹாஃப்மன் வரைந்த **இயேசு** 33 படத்தின் கீழ் நின்று ஜெபித்து பின் வெளியே செல்லுவதைக் குறித்துக் கூறுகிறார். அவர் அந்த படத்திற்கு அத்தனை முக்கியதுவம் கொடுப்பதைப்போன்று நாமும் கொடுக்கவேண்டும் என்பது தேவையில்லை. அவரும் தன் சுயவாழ்க்கையில் அநேக தவறுக்குரியவர் என்பதை நாம் ஒருகாலும் மறந்துவிடக்கூடாது.

37. தேவனுடைய வார்த்தையானது **மேலே வானத்திலும்** , கீழே பூமியிலும் , பூமியின் கீழ் தண்ணீரிலும் **உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான** ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாயிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். யாத்.20:4 & 5. Thou shall not make unto the any graven image, or **any likeness of anything that is in heaven above,** or that is in the earth beneth, or that is in the water under the earth. ஏழு தூதர்களின் கூட்டம் வானத்தில் காணப்பட்ட ஒரு அடையாளம் அதை நாம் புகைப்படம் பிடித்து நமஸ்கரிக்கவோ, சேவிக்கவோ கூடாது. நாம் அவ்வாறு செய்வோமானால் அதுஒரு விக்கிரக ஆராதணையாகும். அது சாத்தானின் வஞ்சகம் ஏனென்றால் காணப்படுகிற அல்லது காணப்படாத ஒரு பொருளின் உருவத்தை, சித்திரத்தை மனிதன் தன் கைவேலையினால் ஆக்கி, அதைத் தெய்வமாகத் தொழுதுக் கொள்வானாகில் அது விக்கிரக ஆராதனை எனப்படும். கிரேக்க மொழியின் ஐடலோன் (Eidolon) என்பதன் பொருள் இதுவே. சித்திர வணக்கம் கூடாது. லேவி.26:1, எசா.2:16, எசே.8:10.

38. கிறிஸ்துவுக்குள் மரித்தோர் உயிரோடெழுந்துவிட்டார்கள், 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது, தற்போது நாம் 1000 வருட அரசாட்சியில் இருக்கிறோம் என புதுக்கோட்டை ஜெயராஜ் மற்றும் அவரது வேலையாட்களும் சத்தியத்தை விட்டு விலகி வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து அநேகரை விசுவாசத்தை விட்டு விலகப்பண்ணி சபையில் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்கி வருகின்றனர்.பாருங்கள், 1000 வருட அரசாட்சியில் சாத்தான் கட்டப்பட்டிருப்பான். ஆதலால் கேடு செய்வோரில்லை, தீங்கு செய்வோரில்லை. அங்கு சமாதானம் நிலவும். ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும். பசுவும் கரடியும் கூடி மேயும். சிங்கம் மாட்டைப் போல வைக்கோல் மேயும். நாம் மீட்கப்பட்ட மகிமையின் சரீரத்தில் இருப்போம். இயேசு தாவீதின் குமாரனாக ஆட்சிசெய்வார். இங்கு பசி, வியாதி, துக்கம், துயரம், மாம்சைஇச்சை, கண்களின்இச்சை, ஜீவனத்தின் பெருமை, பொருளாசை, வஞ்சகம், சூது போன்ற மாம்சத்துக்குரிய கிரியைகள் எதுவும் இருக்காது. அதோடுமட்டுமல்ல **1000 வருட அரசாட்சியின் போது வார்த்தை பிரசங்கிக்கப்படமாட்டாது.** ஏனென்றால் அது அவர்களுக்கு ஏற்கனவே பிரசங்கிக்கப்பட்டுவிட்டது. இதுகுறித்து **கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்** என்ற செய்தியில் 162வது பக்கத்தில் வாசிக்கலாம்.

39. ஆனால் இங்கு 1000 வருட அரசாட்சியில் இருக்கிறோம் என்பவர்கள் மத்தியில் பசி உண்டு, வியாதி உண்டு, மாம்சஇச்சை உண்டு, பொருளாசை உண்டு, சூது உண்டு. இவர்கள் தேவனுடைய வார்த்தையை இன்னும் பிரசங்கித்துக்கொண்டே வருகிறார்கள். ஆக இவர்களது காரியங்கள் அனைத்தும் முரண்பாடாகவே இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக ஒருவருக்கொருவர் முரண்பாடாகவே பேசுகிறார்கள், செயல்படுகிறார்கள். ஏனென்றால் இவர்கள் முரண்பாட்டின் வித்துக்கள் ஆவர்.

40. இவர்கள் மாய்மாலத்தில் அநேகர் மோசம்போனதுண்டு. **1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டதா?** என்ற செய்தித் தொகுப்பை கேட்டுப்பெற்று தியானித்து பயன்பெறுங்கள். இந்தக் கள்ளப் போதனையின் நிமித்தமாக இவர்கள் ஞானஸ்நானம் கொடுப்பதில்லை, கர்த்தருடைய பந்தியை ஆதரிப்பதில்லை. மாறுபாடான இந்த உபதேசத்தின் மூலம் சாத்தான் ஞானஸ்நானத்தை

தடைசெய்து ஒருவனுடைய இரட்சிப்பைப் பறித்துப்போடுகிறான். மேலும் இராப்போஜனத்தை தடைசெய்து இயேசு கிறிஸ்துவில் ஒருவன் நிலைத்திருக்காதபடியும், அவருடைய ஜீவனில் பங்குபெறவிடாதபடியும் விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறான். இவர்கள் திருவசனத்திற்கு, இக்கடைசிகால செய்திக்குக் கீழ்படியாதவர்களும், அருவருக்கப்படதக்கவர்களுமாயிருக்கிறார்கள்.

41. இந்தக் கூட்டத்தாரின் மற்றொரு உபதேசம் என்னவென்றால் வெளிப்படுத்தின் விசேஷத்தில் எங்கெங்கு ஏழு என்ற நம்பர் வருகின்றதோ, அதெல்லாம் சகோ.பிரன்காமின் ஊழியத்தையே குறிக்கும் என்பதாகும். இந்த உபதேசத்தை புதுக்கோட்டை ஜெயராஜ் கையாள் கோவை நெவில் என்பவர் மூலம் என் காதுகளால் கேட்டேன். சகோ.பிரன்காம் ஏழாம் சபை தூதன் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். நாம் வெளிப்படுத்தின விசேஷத்தில் காணும் ஏழு எக்காளங்கள் நாம் வாழும் இந்த காலத்துக்கு பொருத்தமல்ல. அது இஸ்ரவேல் ஜனங்களுக்கு மாத்திரமே. சகோ.பிரன்காம் புறஜாதி தூதன், தீர்க்கத்தரிசி. அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அல்ல. ஊதப்பட்ட எக்காளங்கள் அனைத்துமே ஆறாம் முத்திரையின் கீழ் முழங்கின ஏனென்றால் ஏழாம் முத்திரையின் கீழ் அமைதி உண்டானது அது யாருக்குமே தெரியவில்லை. அது தான் கிறிஸ்து வரப்போகும் நிமிடம் அல்லது மணி நேரம். அந்த ஏழாம் முத்திரை இன்னும் திறக்கப்படவில்லை. உங்களுக்குத் தெரியும். அது அவருடைய வருகை. (**எக்காளப்பண்டிகை**, பக்கம் 41) ஒவ்வொரு எக்காளமும் ஆறாம் முத்திரையின் கீழ், யூதர்களின் உபத்திரவத்தின் போது முழங்கின. ( **எக்காளப்பண்டிகை**, பக்கம் 34, பத்தி 3: பக்கம் 35, பத்தி 2) ஆறாம் முத்திரை திறக்கப்படும் போது, யூதர்களுக்கு உலகத்தில் உபத்திரவம் தொடங்குகிறது. அதே சமயத்தில் சபைக்கு மார்க்கசம்பந்தமான உபத்திரவம் வருகிறது. ஏனென்றால் மணவாட்டி ஏற்கனவே அழைக்கப்பட்டுவிட்டால் (**எக்காளப்பண்டிகை**, பக்கம் 52)

42. ஆறாம் எக்காளத்திற்கும், ஏழாம் எக்காளத்திற்குமிடையே புறஜாதிக்கு ஒரு தீர்க்கத்தரிசி தோன்றி ஜனங்களை மூலபெந்தெகொஸ்தே உபதேசத்திற்கு அழைக்கவேண்டும் (**எக்காளப்பண்டிகை**, பக்கம் 59) ஆறாம், ஏழாம் எக்காளங்களின் நடுவில் மோசே,எலியா இவர்களின் ஊழியம் --- இஸ்ரவேல் எப்பொழுதுமே தங்கள் தீர்க்கத்தரிசிகளை விசுவாசித்தனர் (**எக்காளப்பண்டிகை**, பக்கம் 64) ஏழாம் சபைதூதன், ஏழாம் எக்காளத்தூதன் அனைவருமே தீர்க்கத்தரிசிகள் (**எக்காளப்பண்டிகை**, பக்கம் 65) மணவாட்டி மேலே செல்வதற்காக வழி விலகவேண்டும். அப்பொழுது தேவனுடைய இரண்டு ஊழியக்காரர்கள் - வெளிப்படுத்துதலில் கூறப்பட்டுள்ள அந்த இரண்டு தீர்க்கத்தரிசிகள் தோன்றி ஏழாம் எக்காளத்தை ஊதி, கிறிஸ்துவை அவர்களுக்கு தெரியப்படுத்துவார்கள். (**எக்காளப்பண்டிகை**, பக்கம் 68) இதிலிருந்து ஏழாம் எக்காளத்தூதன் , ஏழாம் சபைக்கால தூதன் அல்ல என்று உங்களுக்குப் புரிகிறதா? ஆதலால் புதுக்கோட்டை ஜெயராஜ் மற்றும் அவரது சகாக்களின் மாய்மால உபதேசங்களை நம்பி மோசம் போகாதீர்கள்.

43. பாலாசீர்லாரி ஊழியத்திலும் அநேகர் வஞ்சிக்கப்பட்டனர். ராசையா பாலாசீர்லாரி மனுஷ குமாரனாகி, நாராயண பகவானின் பத்தாவது அவதாரமாகி, ஸ்ரீலஹரிமுத்துகிருஷ்ணாவாகி, குருதேவ் ஸ்ரீலஹரிமுத்துகிருஷ்ணாவாகி, பகவான் ஸ்ரீலஹரிகிருஷ்ணாவாகி, முடிவாக சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரானார். இப்படியாக அவ்வப்போது பல நாமங்களினால் இவர் அழைக்கப்பட்டார். இவருடைய ஊழியத்தின் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்பட்டதா? இல்லவேயில்லை. அப்படியானால் அவர் ஊழியத்தின் பலன் தான் என்ன? அவர் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து , அவரது வாரிசுகள் பல தலைமுறை தலைமுறையாக எந்த ஒரு வேலையும் செய்யாமல், சோம்பேறிகளாக உட்கார்ந்து, புசித்து, தூங்கி எழும்ப வழிவகைகள் செய்துவிட்டுச் சென்றார். ஏமாறியவர்கள் யார்? ஏமாளிகள்.

44. இவ்வண்ணமாகவே மும்பையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த டேனியல் கிறிஸ்டியான் என்பவரும் பிசாசின் வல்லமையில் அகப்பட்டு இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்து இதோ இங்கே மேகஸ்தம்பம், அதோ அங்கே அக்கினிஸ்தம்பம், மும்பையிலிருந்து செய்தி சென்று உலகத்தையே கலக்கப்போகிறது என தாரை ஊதி, தம்பட்டமடித்து கொக்கரித்தார். இவரது ஊழியத்தை பிரஸ்தாபப்படுத்த பல சகாக்கள். பாலாசீர்லாரிக்கு ஜீவபுத்திரன். இவருக்கு ஜான்பாண்டியன். அக்கினிஸ்தம்பம் ஷோ நன்றாக ஓடியது. காணிக்கை, தசமபாகம், அக்கினி ஸ்தம்ப படங்களின் விற்பனைகள் நல்ல வசூலைக் கொண்டுவந்தது. அவர், அவரது சகாக்கள் லட்சாதிபதிகள் ஆயினர். ஏழை , எளிய விசுவாசிகளை கொள்ளையிட்ட பொருள்களால் வீடு நிறைந்தது. வீட்டோடே வீட்டைச்சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டினர். தன்னுடைய தல்லாததைத் தனக்காகச் சேர்த்துக்கொள்கிறவனுக்கு ஐயோ. தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராய் ஆடம்பரமான சுகபோக வாழ்க்கையை அனுபவித்தனர். இந்த ஊழியம் குறித்து எதிர்ப்பு எழுந்தது. மக்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. அக்கினிஸ்தம்பம் தொழிலில் சரிவு ஏற்பட ஆரம்பித்தது. உடனே தொலைக்காட்சி தொழில் ஆரம்பித்து, அது தொல்லைக்காட்சி தொழிலாக மாறினது. அக்னிஸ்தம்பம் வசூலை இது கொடுக்கவில்லை. முடிவில் இந்த ஊழியத்தின் பலன் தான் என்ன? இவரும், இவருடைய கூட்டத்தாரும் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து பலலட்சங்களுக்கு அதிபதிகள் ஆயினர். இங்கும் ஏமாந்தவர்கள் யார்? ஏமாளிகள் தான். ஆக இந்நாட்களில், இக்காலத்துக்குரிய செய்தி என்ற போர்வையின் கீழ் சிலர் பணம் சம்பாதிக்கின்றனர், பலர் ஏமாறுகின்றனர். இவ்வாறாக பணம் சம்பாதிக்கிறவர்கள் மந்தையை மோசம்போக்குகிறவர்களாய் இருக்கிறார்கள். இது குறித்து **உற்பத்தி செய்யப்படும் அந்நிய அக்னிஸ்தம்பம் மற்றும் தொலைக்காட்சி** என்ற செய்தி தொகுப்பைக் கேட்டு பெற்று பயன்பெறுங்கள்.

45. 1995ஆம் ஆண்டு **கிறிஸ்தவ விவாகம் மற்றும் விவாகரத்து** என்ற செய்தித் தொகுப்பை வெளியிட்டேன். இதன் செலவு எனக்கு அப்பொழுது ஏறக்குறைய ரூ.20,000/- ஆகிவிட்டது இதில் எனக்கு சென்னை சகோ.ரவிக்குமார் (அந்நாட்களில் அவர் ஜப்பானில் வேலைபார்த்து வந்தார், இந்நாட்களில் அவர் சிங்கப்பூரில் வேலைபார்த்து வருவதாகக் கேள்விப்பட்டேன்) ரூ.13,000/- கொடுத்து உதவினார். மீதியை நான் பல கஷ்டத்தின் மத்தியில் சமாளித்து, அதைத் திரும்பச் செலுத்தமுடியாமல் பல கஷ்டங்கள் பட்டு, அதினால் நிந்தையும் அடைந்தேன். சகோ.ரவி தான் செய்த உதவியை நான் யாரிடமும் கூறக்கூடாது எனக் கட்டளையிட்டிருந்தார். நான் சென்னை செல்லும் பொழுது இவர் வீட்டில் தான் தங்கி , உண்டு, ஊழியம் செய்து, இளைப்பாறி வருவது வழக்கம். ஆதலால் இந்த உதவியை அவர்கள் வீட்டாருக்குத் தெரியாமல் இருக்கக்கூடாது என நினைத்து, இந்த உதவி குறித்து அவரது இளைய சகோதரனிடம் கூறினேன். உடனே அவர் எனக்கு விரோதமாக சூழ்ச்சி செய்து , எனக்கு மேற்கொண்டு இந்த உதவி வராதபடி தடைசெய்தார். இதற்குக் காரணம் அவர் விரும்பாத அநேக காரியங்கள் எனது செய்தித் தொகுப்பில் இடம் பெற்றதாகும். இவர் வீடு முற்றிலுமாக கலப்புத் திருமணத்தைக் கொண்டது. நான் அதை ஆமோதிக்காதது உதாரணத்திற்கு ஒன்று ஆகும்.

46. ஆக எனக்கு வந்த உதவி, தடைசெய்யப்பட்டு , பாஸ்டர் பால்சங்கருக்கு சென்றது. பின் இவருக்கும் சகோ.ரவியின் இளைய சகோதரருக்கும் மனஸ்தாபம் உருவாக, இதனால் ஒரு சில மாதங்களுக்குள்ளே இந்த உதவி பாஸ்டர் பால்சங்கருக்கு நிறுத்தப்பட்டு, பாஸ்டர் தங்கமணிக்கு வர ஆரம்பித்தது. ஏனென்றால் சகோ.ரவியின் இளைய சகோதரர் பாஸ்டர் தங்கமணி சபைக்கு பாஸ்டர் பால்சங்கரன் சபையிலிருந்து தாவினார். பாஸ்டர் தங்கமணிதான் நன்கு இந்த உதவிகளை பிற்காலங்களில் அனுபவித்தார். இந்த உதவியிலிருந்து சபையில் சிலர் பங்குகேட்க ஆரம்பித்து அதன்முயற்சி பலன்கிட்டவில்லை. ஆதலால் சபையில் பிரிவினைகள் ஏற்பட்டு சபை உடைந்தது.

47. சகோ ரவி ஆறு ஆண்டுகளுக்கு பின்பு சென்னை திரும்பினார். பல மாதங்கள் கழித்து நான் அவரை சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர் என்னிடம் கடந்த ஆறு ஆண்டுகளாக ரூ.6,00,000/- மேல் அனுப்பியுள்ளேன், எனது உதவியினால் இங்கு ஒரு ஆலமரம் வளர்ந்து, பல கிளைகளைக் கொண்டு , அதில் பல பறவைகள் கூடுகட்டி வாழ்ந்துகொண்டிருக்கும் என நினைத்து வந்தேன். ஆனால் ஆலமர விதை விதைக்கப்பட்ட இடத்தையே காணோம் எனக் கூறி புலம்பினார். இவ்வாறாக ஒருவருடைய தசமபாகம், காணிக்கை தனிப்பட்ட மனிதருடைய வாழ்க்கைக்கு பக்கவருமானமாக சென்றது. இன்று பல ஊழியர்கள் தேவ பக்தியை ஆதாயத்தொழிலாகவே கொண்டு ஊழியம் செய்கின்றனர்.

48. நான் பாஸ்டர் தங்கமணி சபைக்கு ஒரு நாள் சென்ற சமயம் , செய்தி வேளையில் தசமபாகம் இதர நான்கு வகை ஊழியங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும், ஏனென்றால் சபைபக்தி விருத்திக்கு தேவன் ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தியுள்ளாரேயன்றி பாஸ்டர் ஊழியத்தை மட்டுமல்ல என உபதேசித்தேன். மறுமுறை இவர் என்னை தனது சபையில் அனுமதிக்க மறுத்துவிட்டார்.

49. இவர் தனிப்பட்ட முறையில் 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்ற நம்பிக்கையுள்ளவர். ஆனால் அதை சபையில் உபதேசிக்க மாட்டார். பச்சோந்தி வேஷம் போடுகிறவர். இவரையும் நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள் தங்களது ஆத்துமாவை கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள சபைகளில் ஊழியர்கள் பெரும்பாலும் கள்ள, கபடமுள்ள வேலையாட்களாகவே இருக்கிறார்கள் ஜீவ மார்க்கத்தை சிந்தித்துக்கொண்டிராதபடிக்கு இவர்கள் நடைகள் மாறி மாறி (உபதேசங்கள் மாறி மாறி) விகாரப்படுகின்றன. சத்திய மார்க்கம் இவர்களால் தூசிக்கப்பட்டு வருகிறது. ஆதலால் அவர்களது வீட்டு வாசலை கிட்டிச் சேராதீர்கள்.

50. பல ஆண்டுகளாக சென்னை, ஆவடியில் பாஸ்டர் ஆமோஸ் பாஸ்கரன் நடத்திவரும் சபையில் ஐக்கியப்பட்டிருந்தேன். ஒரு கை விரல்கள் எண்ணிக்கை விசுவாசிகளே இருந்தனர். **கிறிஸ்து பிரன்காம்** கூட்டத்தினர் பலர் வந்து மந்தைக்குள் நுழைந்தனர். சபை ஆதிக்கத்தை கைப்பற்றினர். சபையில் ஆட்கள் நிரம்பியது. காணிக்கை , தசமபாகம் வரத்து அதிகரித்தது. ஆதலால் இப்பிரபஞ்சத்தின் தேவன் பாஸ்டரது மனதைக் குருடாக்கினான். ஆதலால் பாஸ்டர் ஆமோஸ் ஜனக்கூட்டம், காணிக்கை மற்றும் தசமபாகம் மீது ஆர்வம் காட்டலானார். நான் சத்தியத்தில் ஆர்வம் காட்டினேன். முடிவில் சத்தியம் தள்ளுபடியாயிற்று. பாஸ்டர் ஆமோஸ் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து என்னுடைய ஐக்கியத்தை உதாசீனப்படுத்தினார். மனுஷன் படும் பிரயாசங்களெல்லாம் அவன் பிழைப்புக்காகத்தான் என்பதை கண்டுகொண்டேன். இப்படியாக ஜனக்கூட்டத்திற்கும் , காணிக்கை மற்றும் தசமபாக வரத்திற்கும் பல சபைகள் பல இடங்களில் இக்காலத்திற்குரிய செய்தியில் இயங்கி வருகின்றன. சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களை எல்லாம் கவனித்துப்பார்த்தேன், இதோ எல்லாம் மாயையும் , மனதுக்குச் சஞ்சலமுமாய் இருக்கிறது. ஆக , ஆவடியில் ஒரு சனிக்கிழமை இரவு சத்தியம் தள்ளுபடியாக, வாரத்தின் முதல் நாளாகிய மறுநாள் திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்துக் கொடுத்தார். சென்னை, புரசவாக்கத்திலுள்ள **பெனியேல் ஜெபவீடு** பாஸ்டர் என்னை ஏற்றுக்கொள்ள கடந்த ஒரு ஆண்டு காலமாக சபையில் ஐக்கியம் கொண்டு ஊழியம் செய்து வருகிறேன்.

51. ஒருவன் தன்னைத் தானே பாஸ்டர் என அழைத்துக்கொண்டு மாயையான தாழ்மையில் தனக்கென்று ஒரு கூட்டம் ஆத்துமாக்களை வேட்டையாடி, லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் அவர்களை தன் கூண்டுக்குள் அடைத்து , தன் கரங்களுக்குள் அடக்கி ஆண்டு, அவர்கள் மூலமாய் கிடைக்கும் காணிக்கை மற்றும் தசமபாகங்களை கொண்டு, விசுவாசிகளுடைய வாழ்க்கை தரத்தைவிட தன் வாழ்க்கை தரத்தை உயர்த்தி, கொழுத்ததை அடித்து, நெய்யை சாப்பிட்டு , சுகபோகமான வாழ்க்கை வாழ்ந்து மந்தையை ஆளுகை செய்கிறான். இவன் பொருளாசை உள்ளவனாய் தந்திரமான வார்த்தைகளால் விசுவாசிகளை தனக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுகிறான். 2 பேது.2:20. இவன் கண்ணி வைத்து மனுஷர்களை பிடித்து, தன் வீட்டை கபடங்களினால் நிறைத்து, ஐசுவரியவானாகிறான். எரே.5:27. கொடுமையினாலும், வஞ்சகத்தினாலும் தன் வீட்டை நிரப்புகிறான். ஆத்துமாக்களை கொள்ளையிட்டு அநியாயமாய் பொருள் சம்பாதிக்கிறான். இவன் விசுவாசிகளை நாடி வைராக்கியம் பாராட்டி, பின் அவர்கள் இவனை நாடி வைராக்கியம் பாராட்டும் பொருட்டு அவர்களை புறம்பாக்குகிறான். கலா.4:13 இப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றிற்கே ஊழியம் செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப்பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயத்தை வஞ்சிக்கிறார்கள். ரோ.16:18 இப்படிப்பட்ட தொழில் செய்கிறவர்கள் காணிக்கை மற்றும் தசகபாகத்திற்காக மந்தையை மேய்க்கும் மேய்ப்பர்களாய் இருக்கிறார்கள். ஆம் , மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்க்கிறார்கள். இவர்களும் மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களே. இக்காலத்திற்குரிய செய்தியில் இப்படிப்பட்ட ஓநாய்கள் நிறைய உண்டு. நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான். ஓநாய்கள் ஆட்டை கடித்து கொன்று தன் வயிற்றை நிரப்பும். அதுபோல் கள்ள மேய்ப்பர்கள் விசுவாசிகளின் காணிக்கை மற்றும் தசகபாகத்தினால் வயிற்றை நிரப்புகிறார்களேயன்றி அவர்களுக்காக கவலைப்படமாட்டார்கள்.

52. இன்னும் சிலர் பத்து ஆத்துமாக்கள் கூட தங்கள் சபையில் இல்லாவிட்டாலும், வெளிநாடுகளிலிருந்து வரும் ஊழியர்களை அவர்கள் ஏஜெண்ட் மூலம் தன் சபைக்கு வரவழைத்து , பற்பல இடங்களில் இருந்து விசுவாசிகள் மற்றும் ஊழியர்களை அழைத்து, தன்னை ஒரு பெரிய சபை நடத்துகிறவனாக காண்பித்து , பொருளாசை என்னும் அக்கிரமத்தின் நிமித்தம் தன் சபைக்கு ஒரு கட்டிடம் கட்ட அதை வெளிநாட்டு ஊழியக்காரனுக்கு அவருடைய இந்திய ஏஜெண்ட் மூலம் வால் பிடித்து, பண உதவிகள் பெற்று, தன் பெயரிலே ஒரு சபை கட்டிடத்தைக் கட்டி , அதை தன் உடமையாக்கிக் கொள்ளுகிறார்கள். இந்த தொழிலுக்கு நமது தமிழ் நாட்டில் பிரதான ஏஜெண்ட் சென்னை சகோ.எட்வர்ட் ஆகும். பெங்களூரில் சகோ.அலோஷியஸ் தாமஸ் ஆகும். இவர்கள் இருதயத்தின் நினைவுகள் , யோசனைகள் யாவும் எப்படி ஒரு வெளிநாட்டு ஊழியக்காரனிடமிருந்து பணத்தை ஒரு மாட்டிலிருந்து பால் கரப்பது போன்று கரப்பது என்பதே. சகோ.எட்வர்ட் மூலம் சென்னை சகோ.ஜிஞ்சி தேவராஜ், மதுரை சகோ.ரவிச்சந்திரன் போன்றவர்கள் பயனடைந்துள்ளனர். சகோ.எட்வர்ட் தனக்கென்று ஒரு பெரிய சபையை கட்டி , அதை தன்னுடையதாக்கி பல லட்சத்துக்கு அதிபதியாகிவிட்டார். அதோடுமட்டுமல்ல மற்றவர்களையும் லட்சாதிபதியாக்கி வருகிறார். சகோ.அலோசியஸ் மூலம் நாகர்கோவிலில் சகோ.ஜோதிபிரகாஷ் லட்சாதிபதியானார். இவ்வாறாக பல ஊழியர்கள் இக்காலத்திற்குரிய செய்தி என்ற பெயரில் நயவஞ்சகமான முறையில் தங்களை லட்சாதிபதியாக்கிக்கொண்டு வருகிறார்கள். நம் மத்தியில் உள்ள மேய்ப்பர்கள் கர்த்தரை தேடாமல் வெளிநாட்டிலிருந்து வரும் ஊழியக்காரர்களையே தேடுகிறார்கள். இவர்கள் கள்ள கபடமுள்ள வேலையாட்களே. அதோடுமட்டுமல்ல பச்சோந்திகள். காலத்துக்கும் , சமயத்துக்கும் , நேரத்திற்கும், ஆளுக்கும் ஏற்றவாறு அவ்வப்போது தங்கள் உபதேசங்களை மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

53. எப்படியோ சகோ.எட்வர்ட் பிஸ்கல் - கனடா செல்வச்செருக்கின் மிகுதியினால் தமிழ்நாட்டில் அநேக ஊழியக்காரர்கள் ஐசுவரியவான்களாகி வருகிறார்கள். சகோ.எட்வர்ட் பிஸ்கல் தீர்க்கதரிசியின் செய்திகளை ஆங்கிலத்திலிருந்து பல மொழிகளில் மொழிபெயர்த்து அவைகளை பிரிண்ட் செய்து வந்தாலும் , அவ்வப்போது ஊழியர்களுக்கும் உதவி செய்து அவர்களை தாங்கி வருகிறார். அவர் தாங்குவது சரியான நபரோ அல்லது தவறான நபரோ அது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் ஊழியர்களை தாங்குவது ஒரு சிறந்த பண்பாடு ஆகும். ஆனால் இந்த நற்குணம் சகோ.ஜோசப் பிரன்காமிடம் நான் பார்க்கவில்லை. தானும் தன்னுடைய வீட்டாரும் நலமாயிருந்தால் போதும் என்ற மனப்பான்மை கொண்டவராக இருக்கிறார். இவரைக் குறித்து இது என்னுடைய கணிப்பு. அவனவன் தனக்கானவைகளை அல்ல பிறக்கானவைகளையும் நோக்குவானாக. பிலி.2: 3 & 4 இதுவே மாயமற்ற சகோதர சிநேகம். 1பேது.1:22

54. ஊழியர்களைப் பணத்தில் ஊக்குவிப்பது கனடா நாட்டு பாஸ்டர் எட்வர்ட் பிஸ்கலின் அசோஷியேட் பாஸ்டர் சகோ.அந்தோணி அப்மா ஆகும். இவர் தான் வில்லியம் பிரன்காம் குட் நியூஸ் சொசைட்டியின் பிரிண்டிங் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார். ஆதலால் அடிக்கடி இந்தியா வந்து செல்கிறார். இவரது நண்பர் நெதர்லாந்து சகோ.கிளாஸ் டி ஜங்க். இவர்கள் இருவரும் பெரிய அரசியல் வாதிகள். இவர்கள் இருவரும் இங்குள்ள ஊழியர்களை தங்களது பணஆதிக்கத்தினால் அடிமைகளாக்கி , பிரிவினை சக்திகளை ஊக்குவித்து, இந்தியாவிலுள்ள சபைகளை பாழாக்கி வருகின்றனர்.

55. இந்தியாவில் சிலர் பிலேயாம் கூலிக்காக செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி அநீதியின் கூலியை விரும்பி ( 2பேது 2:14 & 15 ) இவர்களைத் தங்கள் தலைக்கு மேல் வைத்து ஆடி

வருகின்றனர். இவர்கள் தான் சபைகளை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துவது போன்று , இவர்கள் ஆலோசனைகளையே கேட்டு நடந்து வருகின்றனர். நம் நாட்டிலுள்ள சில பாஸ்டர்களுக்கு இவர்களுடைய வாக்கு தான் வேதம். அதற்கு அவர்கள் போடும் எலும்புத் துண்டுகளே காரணம். இவர்கள் இருவரும் தங்கள் காரியங்களை தங்களது நாட்டில் மிக்க சாதூர்யமாக சமாளித்து வருகின்றனர். அதற்கு உடந்தையாக இருப்பது நமது நாட்டு கள்ள, கபடமுள்ள வேலையாட்கள்.

56. இங்கு மற்றொரு சம்பவத்தை எழுத வாஞ்சிக்கிறேன். மறைந்த பாஸ்டர் இயேசுதாஸ் கணேஷன் தன் சபை கட்டிடத்திற்கென பல லட்சம் பணம் சேகரித்தார். சபையாரைக் கொண்டு ஒரு சபைக் கட்டிடத்தைக் கட்டினார். அதோடு மட்டுமல்ல தனக்கென்று ஒரு வீட்டையும் கட்டினார். அந்த இரு கட்டிடத்தையும் தன் பெயரில் மிக்க சாதூரியமான, தந்திரமான, வஞ்சகமான முறையில் ரிஜிஸ்டர் பண்ணிக்கொண்டார். முடிவில் பலலட்ச சொத்துக்கு உரிமையாளரானார். பின் ஓரிரு ஆண்டுகளுக்குள் மரணமடைந்தார். அவரது மனைவி சபைக்கட்டிடம் மற்றும் வீட்டுக்கு உரிமை கொண்டாடினார். பிரச்சனைகள் உருவானது சபை உடைந்தது. என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு எனப்படும். (ஏசா.56:7) என்பது சகல ஜனங்களுடைய ஜெபவீடு எனது சொந்த வீடு என ஆனது.

57. ஒரு முறை பாஸ்டர் ரவீந்திரராஜ் , நடுவீரப்பட்டு, சென்னை - ஜெர்மன் சகோ.கர்டு (Bro.Gerd) உதவியால் கட்டிய தன் சபைக்கு , இது என்னுடைய சபை இங்கே நீ வராதே என்று என்னை விரட்டினார். தேவனுடைய ஜெபவீடு இவருடைய சொந்த அசையா சொத்தாக மாறியது. இவ்வாறாக மக்களையும் வெளிநாட்டினரையும் ஏமாற்றி தன் பெயரில் சபை கட்டிடங்களைக் கட்டி அசையா சொத்துக்களை தனக்கு சுதந்திரமாக்கிக் கொண்டார். இவருக்கு ஜெர்மன் சகோ.கர்டு தவிர மற்றொரு வெளிநாட்டு சகோதரரும் இவர் கரங்களுக்குள் சிக்கினார். டேப் ஊழியம் ஆரம்பமானது. தனது பாஸ்டர் பதவியை இவரது சபையிலுள்ள மற்றொரு சகோதரனிடம் ஒப்படைத்தார். தனது டேப் ஊழியத்தில் ஈடுபட்டார். பின் டேப் ஊழியம் டல்லடித்தது. மீண்டுமாக சபைக்கு வந்து தனது பாஸ்டர் பதவியை பறித்துக்கொண்டார். பாஸ்டர் ஊழியம் இந்த கேடுகெட்ட நிலையில் இருக்கிறது. இதிலிருந்து இவர்களெல்லாம் தங்களுக்காக ஒரு ஊழியத்தை ஏற்படுத்திக்கொண்டு மக்களை ஏமாற்றி வருகிறார்கள் எனத் தெரிகிறது. மேலும் இவர் தன்னுடைய மக்கள் அனைவரையும் அவ்விசுவாசிகளுடன் விவாக பந்தத்தில் இணைத்தார். இவருக்கு பாஸ்டர் பதவி ஒரு கேடா? இவருக்கும் இக்காலத்துக்குரிய செய்திக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றிற்கும் பிரயோசனமில்லாத இவரது மாயையான தாழ்மையினால் பலர் இருதயத்தை கவர்ந்து கொள்கிறார், ஏமாற்றுகிறார். இக்காலத்துக்குரிய செய்தியில் ஊழியர்கள் மத்தியில் எங்கும் வஞ்சகம், மாய்மாலம், பொருளாசை, சூது காணப்படுகிறது. துர்கிரியைகளுக்கு தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பை செய்ய அவர்களுக்குள்ளே துணிகரம் கொண்டிருக்கிறது.

58. இன்னும் சில பாஸ்டர்கள் தங்கள் ஜெபவீட்டை வியாதியஸ்தர்களின் மினி சரணாலயம் ஆக்கி, வியாதியிலிருந்து விடுதலை, பில்லி சூனியத்திலிருந்து விடுதலை எனக் கூறி தங்கள் வயிற்று பிழைப்பை சமாளித்து வருகிறார்கள். வியாதி உள்ளவர்களை சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளை சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள் , பிசாசுகளை துரத்துங்கள். இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள். மத்.10:8 இலவசமாய் பெற்ற வரத்தை இலவசமாய் கொடுக்காமல், அதைக் கொண்டு பணம் சம்பாதிக்கும் பாஸ்டர் ஒரு கேயாசியே. 2இரா.5:20-27. இப்படிப்பட்ட ஊழியக்காரர்களின் வஞ்சக வலையில் விழுந்து விடாதீர்கள். இவர்கள் மூலமாக பெறும் விடுதலை தெய்வீகசுகம் இல்லை.

59. சில பணவசதியுள்ள ஊழியர்கள் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருகின்றனர். இவர்கள் சில பாஸ்டர்களுக்கு பண உதவிகள் செய்து அவர்களை அடிமையாக்குகின்றனர். இந்த முதலாளிகளை பிரியப்படுத்த இவர்களது தொழிலாளிகள் , தங்களை பாஸ்டராக அவர்களைக் கொண்டு பிரிதிஷ்டை பண்ணிக் கொள்கின்றனர். சென்னை, நடுவீரப்பட்டு, பாஸ்டர் ரவீந்திரராஜ் இவர்களில் ஒருவர். இப்படி தங்களை பாஸ்டராக பிரிதிஷ்டை பண்ணிக் கொண்டவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல, தேவனால் அழைக்கப்பட்டவர்கள் அல்ல. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் அல்ல. மாறாக இவர்கள் தேவ சித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கின்றவர்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

60. ஐந்து வகை ஊழியங்கள் (எபே.4:13) தேவனால் நியமிக்கப்பட்ட உத்தியோகங்கள். மனிதர் அந்த ஊழியத்தை வகிக்கின்றனர். அவைகளை நீங்கள் விரும்பிப்பெறமுடியாது. அவைகளுக்காக நீங்கள் ஜெபம் பண்ண முடியாது. நீங்கள் அந்த உத்தியோகத்தை கொண்டவர்களாகவே பிறக்கின்றனர். யாராவது ஒருவர் , ஒருவர்மேல் கைவைத்து அவனை தீர்க்கத்தரிசியாக்கினால், அவர் தீர்க்கத்தரிசி அல்ல. ஒரு தீர்க்கத்தரிசி தன் தாயின் கர்ப்பத்திலிருந்தே தீர்க்கத்தரிசியாய் இருக்கிறார். (கிருபையின் செய்தி , பத்தி 192&193)

61. பிரியமானவர்களே தேவனால் நியமிக்கப்பட்ட ஐந்து வகை ஊழியர்களை ஒருவர் தன் கைவைத்து அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவரை ஒரு ஊழியத்திற்கு ஏற்படுத்த முடியாது. அவ்வாறாக தன்னை ஊழியத்துக்கு அர்பணிக்கிறவனும், அவர்களை ஊழியத்திற்கு ஏற்படுத்துகிறவனும் கள்ள கபடமுள்ள வேலையாட்களே. நமது மத்தியில் பண பலம் கொண்ட சில பாஸ்டர்கள் , ஏழை எளிய நிலையிலுள்ள சிலருக்கு பண உதவிகள் செய்து, அவர்களை

ஆட்கொண்டு, அவர்களை பாஸ்டராக ஏற்படுத்தி தங்களை ஒரு பெரிய புள்ளியாக காட்டிக்கொண்டு நம் மத்தியில் ஊழியம் செய்து வருகின்றனர். நீங்கள் இவர்களை அடையாளம் கண்டு கொண்டு இவர்களையும் விட்டு விலகுங்கள். ஏனென்றால் தேவன் ஏற்படுத்தாததை, நியமிக்காததை இவர்கள் தங்கள் பணத்திமிரினால் ஏற்படுத்துகிறார்கள், நியமிக்கிறார்கள்.

62. இன்னும் சிலர் தங்களை ஐந்து வகை ஊழியத்தில் ஒரு ஊழியக்காரனாக, பொதுவாக பாஸ்டராக அழைத்துக்கொண்டு தீர்க்கத்தரிசியின் செய்திகளை மொழிபெயர்த்துக்கொண்டு, அதன்மூலம் பணம் சம்பாதித்துக்கொண்டு சில வெளிநாட்டு ஊழியர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு தங்கள் காரியங்களை சமாளித்து வருகிறார்கள். இவர்களும் வயிற்று பிழைப்புக்காக ஐந்து வகை ஊழியத்தில் ஒருவனாக தங்களைத் தாங்களே ஏற்படுத்திக்கொண்டு தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்களே. இவ்வாறாக வயிற்றுபிழைப்புக்காக ஊழியம் கொண்டுள்ள நபர்களை நீங்கள் அடையாளம் கண்டு அவர்களை விட்டு விலகுங்கள். அவர்கள் உங்களை செம்மையான பாதையில் வழிநடத்த முடியாது. ஏனென்றால் ஒரு பாஸ்டருக்கும் செய்திகளை மொழிபெயர்க்கும் பணிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அவன் தேவனால் ஒரு மந்தையை வழிநடத்த ஏற்படுத்தப்பட்டவன். பாஸ்டரது பணி வசனத்தைப் போதித்து , மந்தையை புல்லுள்ள இடங்களில் மேய்த்து , அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் வழிநடத்திச் செல்வதாகும். இதுவே ஒரு மேய்ப்பனுடைய பணி. செய்திகளை மொழிபெயர்ப்பது ஐந்து வகை ஊழியத்தில் இல்லாத, உண்மையும் உத்தமுமாக, செய்தியை தங்கள் வாழ்க்கையில் கடைபிடிக்கும் விசுவாச குடும்பத்திலுள்ள ஒரு தனிப்பட்ட நபருடைய பணியாகும்.

63. பிரியமானவர்களே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்திக்கு ஐந்து வகை ஊழியங்கள் தேவை. எபே.4:11-13. ஆனால் பாஸ்டர் ஊழியம் மட்டுமே போதும் எனக்கூறி இதர ஊழியங்களை தனது சபையில் அனுமதிக்காது, தானே எல்லாவற்றிற்கும் எல்லாம் என்ற ஆணவத்தில் சபை நடத்துகிற மேய்ப்பர்கள் மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்களே. ஏனென்றால் இவர்கள் இதர ஊழியங்களை கொண்டு சபையை பக்திவிருத்தியடைய செய்யாது, தனது கூண்டுக்குள்ளே மந்தையை அடைத்து, கொத்தடிமையாக்கி, தன்னுடைய சுயஉபதேசத்தில் மட்டுமே சபையை வளரச் செய்கிறார். சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் , சமாதானம் என்று சொல்லி விசுவாசிகளின் காயங்களை மேற்பூச்சாய் குணமாக்குகிறார்கள். எரே.8:11. ஒரு சபை பக்திவிருத்தி அடைவதற்கு ஐந்து வகை ஊழியத்தின் பலன்கள் தேவை. மற்றபடி அது பக்திவிருத்தி அடையவே அடையாது. தனது சபையில் ஐந்து வகை ஊழியங்களை அனுமதிக்க மறுக்கிறவன் கள்ள, கபடமுள்ள வேலையாளே.

64. ஐந்து வகை ஊழியம் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தது. அதை ஒன்றோடு ஒன்று கலக்கக்கூடாது. ஒருவன் தன்னை அனைத்து ஊழியத்தின் பெயரிலும் அழைத்துக்கொண்டு தன்னை ஒரு பொருட்டாக காண்பிப்பானாகில் அவன் ஒரு கபடமுள்ள வேலையாள். அவன் தன் மூளையில் இருந்து தன் வழியையும் , தன் பொழிவையும் நோக்கிச் செல்லுகிறான். அவன் தகாதவைகளை செய்யும்படி தேவன் அவனை கேடான சிந்தனைக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். தன்னை அனைத்து ஊழியங்களிலும் ஈடுபடுத்திக்கொண்டு நம் மத்தியில் ஊழியம் செய்கிறவர்கள் பிராதனமானவர் மும்பை சகோ.டேனியல் கிறிஸ்டியான் ஆவார்.

65. சபை பண்டக சாலைக்கு வரும் தசமபாகத்தை முழுவதுமாக தன் தொந்தியிலே போட்டுக்கொண்டு, இதர ஊழியர்களைத் தாங்காது , வருவாயை பகிர்ந்து இதர ஊழியங்களுக்கும் கொடுக்காது அனைத்தையும் தன்னுடையதாக்கும் ஒருவன் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனும் , பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளையுமாய் இருக்கிறான். நமது மத்தியில் இழிவான ஆதாயத்தைக் கொண்டுள்ள பாஸ்டர்களே அதிகம்.

66. தங்கள் வாழ்க்கையை முழுநேர பணிக்காக , ஒரு குறிப்பிட்ட தொகைக்காக, தனியாருக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ விற்றுப்போட்டு , பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கி , அந்த வருமானத்தில் திருப்தியடையாத பெருவயிற்று நாய்கள் பக்கவருமானத்திற்காக வழிதேடிச்சென்று, ஐந்து வகை ஊழியத்தில் பண வரவுள்ள ஊழியமாகிய பாஸ்டர் உத்தியோகத்தை தனக்குத்தானே தெரிந்துகொண்டு , அதில் கிடைக்கும் காணிக்கை, தசமபாகங்களைக் கொண்டு உலகப்பொருளுக்கும் தேவனுக்கும் ஊழியம் செய்கிறவன் கள்ள, கபடமுள்ள வேலையாளே. மத்.6:24.

67. பொதுவாக ஒரு ஊழியக்காரன் தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்ப்படியப்பண்ணுகிறவனாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாமல் இருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? 1தீமோ.3:4&5. தேவனுடைய வார்த்தை இவ்வாறிருக்க , உங்கள் மேய்ப்பர்களை கவனியுங்கள். அவர்களில் சிலர் திருமணம் ஆகாதவர்கள், சிலர் திருமணமாகி பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் , சிலர் திருமணம் ஆகியும் , பிள்ளைப்பேறு இருந்தும் தன் குடும்பத்துடன் வாழாமல் தனித்து வாழுகிறவர்கள். அதாவது திருமணமாகியும் பிரம்மச்சாரி வாழ்க்கை. சிலர் விவாகரத்து செய்தவர்கள். சிலருடைய மனைவி இரட்சிக்கப்படவேயில்லை. சிலருடைய மனைவி அடுத்தவனுடன் ஓடிச்சென்று சிலகாலம் அவனுடன் குடும்ப வாழ்க்கை வாழ்ந்து, பின் திரும்பி வந்தவள். இன்னும் சிலர் தங்கள் மனைவியை வெளியே அலுவலகங்களில் வேலைக்கு அனுப்பி, தன்னை ஐந்து வகை ஊழியத்தில் ஒருவனாக அழைத்துக்கொண்டு , ஊர் ஊராக

சுற்றி திரிகிறதை காண்கிறோம். பெண் சம்பாத்தியத்தில் குடும்பம் நடத்திக்கொண்டு ஆண் ஊழியத்தின் பெயரில் ஊர் சுற்றுவது ஊழியத்துக்கே பெரிய அவமானமாகும். அவிசுவாசியான மனைவி மக்களை வீட்டில் வைத்துக்கொண்டு , நான் ஊழியம் செய்கிறேன் என்பவனும் ஊழியம் செய்ய தகுதியற்றவன். இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறவர்களை சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி ஒருகாலும் அங்கீகரிக்காது. ஏனென்றால் இவர்கள் தண்ணீரல்லாத கிணறுகளும், சுழல் காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாய் இருக்கிறார்கள். இவர்களால் யாருக்கும் ஒரு பிரயோசனமில்லை.

68. சிலர் தன்னுடைய பணி பாஸ்டர் எனக்கூறிக் கொண்டு அநேக உபாய தந்திரங்களை தேடிக்கொண்டு சூலூர்பேட்டை முதல் கன்னியாகுமரி வரை சுற்றித் திரிந்து மணமகன், மணமகள் தரகு வியாபாரம் செய்துகொண்டு, விசுவாசியை விசுவாசியோடு இணைப்பதும், விசுவாசியை அவிசுவாசியோடு இணைப்பதும், அவிசுவாசியை திருமணத்துக்காக விசுவாசியாக மாற்றி விசுவாசியோடு இணைப்பதும், அவிசுவாசியை அவிசுவாசியுடன் இணைப்பதுமான தொழில் செய்து வருகிறவனும் கள்ள கபடமுள்ள வேலையாளே. அவன் செய்வது ஒரு பாஸ்டருடைய பணியல்ல. அது திருமண தரகு பணியாகும். ஊர் பல சுற்றித் திரிந்து கொண்டு ஆங்காங்கு மாப்பிள்ளை, பெண் தேடிக்கொண்டு தரகு வியாபாரம் செய்வதுதான் ஒரு பாஸ்டருடைய பணியா? இது பாஸ்டர் பணிக்கே பெருத்த அவமானமாகும்.

69. ஒரு பாஸ்டருடைய பொறுப்புக்குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது? And in all prayer meetings, where they're gathered together , group, to pray or meetings, the Paster must be at every one. It should never be left to any individual to go lead such meetings… the Paster should be at all prayer meetings, and soforth, where congregate or gathering are. (Church order, COD, page 1197, para 48, October 1958) அதாவது ஒரு பாஸ்டர் தன் சபையில் நடக்கும் அனைத்து கூட்டங்களிலும் தவறாது பங்குகொள்ள வேண்டும். எந்த கூட்டத்திலாவது மற்றொருவரை விட்டுவிட்டு செல்லக்கூடாது என செய்தி கூறுகிறது. ஆக பிழைப்புக்காக ஊர் சுற்றித்திரியும் மேய்ப்பனும் கள்ள கபடமுள்ள வேலையாளே. தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ அதே போன்று தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற ஊழியக்காரனும் இருக்கிறான்.

70. அவ்வாறாகவே விசுவாசியாகிய தன் மகளை , மகனை விவாக மஞ்சத்தில் ஒரு அவிசுவாசியுடன் இணைக்கும் ஒரு ஊழியக்காரன் ஒழுங்கற்று நடக்கிற கபடமுள்ள வேலையாளே. நம் மத்தியில் இத்தகைய பாஸ்டர்கள் பலர் உண்டு. இவர்களை அடையாளம் கண்டுகொண்டு இவர்களை விட்டு விலகுங்கள். இவர்கள் உங்களை வழிநடத்தமுடியாது. ஏனென்றால் இவர்கள் இப்பிரபஞ்சத்துக்குரியவர்கள். அவ்வாறாகவே தன்னை பாஸ்டர் என அழைத்துக்கொண்டு விசுவாசியாகிய தன் மகனை, மகளை விவாகரத்துசெய்த ஒரு நபரோடு விவாக மஞ்சத்தில் இணைப்பவனும் தன் குடும்பத்தை நல்லொழுக்கமான வழியில் நடத்த தெரியாதவனே. இவனும் பாஸ்டராக இருக்கத் தகுதியற்றவன்.

71. தன் விசுவாசத்தை , தன் உபதேசத்தை அடிக்கடி மாற்றிக்கொண்டு தன்னைத் தான் பாஸ்டர் என அழைத்துக்கொள்ளுகிறவனும் கள்ள, கபடமுள்ள வேலையாளே. இதில் சென்னை பாஸ்டர் எட்வர்டுக்கு நிகர் அவரே. சமீப நாட்களில் 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது, இராப்போஜனம் தேவையில்லை, நாம் ஆயிரம் வருடம் அரசாட்சியில் இருக்கிறோம் என்று ஒரு பக்கம் உபதேசம் , மறு பக்கம் இதற்கு மறுப்பு தெரிவித்து பல்டியடித்ததில் இவருக்கு நிகர் இவரே. இப்படி மக்களை உபதேசங்களில் குழப்பிக்கொண்டே இருக்கிறார். ஒரு நாள் பாலாசீர்லாரி தான் மனுஷகுமாரன் என்பதும் பின் தன் மனக்கண் திறக்கப்பட்டது நான் இப்பொழுது அந்த உபதேசத்தில் இல்லை, ஆனால் பிரன்காம் கிறிஸ்து என அறிக்கையிடுகிறவனும், பின் ஐயையோ மிகப்பெரிய தவறு செய்துவிட்டேனே சகோ.பிரன்காம் கிறிஸ்து அல்ல மாறாக அவரது ஊழியம் எலியேசருடையது , அவர் மணவாட்டியை மனுஷகுமாரனுக்கு அறிமுகப்படுத்திவிட்டார், எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது, நாம் ஆயிரம் வருடம் அரசாட்சியில் இருக்கிறோம் என நாளுக்குநாள் புதிய புதிய உபதேசங்களை கொண்டு வருகின்றவனும் மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாயே.

72. அந்நிய நுகத்திலே அவிசுவாசியுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக, அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கு ஏது? நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்து போங்கள் என 2கொரி.6:14,15&17 வசனங்களில் வாசிக்கிறோம். அப்படியானால் பவுலுக்கும் சங்கருக்கும், இயேசு தாசுக்கும் கணேஷனுக்கும், ஜேம்ஸ்க்கும் ஜெயராமனுக்கும், டேவிட்டுக்கும் கோவிந்தனுக்கும், அந்திரேயாவுக்கும் ஐயப்பனுக்கும் என்ன சம்பந்தம்?. பாகாலின் நாமங்களை நமது வாயினால் உச்சரிக்கக் கூடாது. ஓசி.2:17. இப்படியிருக்க பிரதர் பால்சங்கர் Praise the Lord எனக் கூறுகிறோம். பவுலையும் சங்கரையும் இணைப்பவன், இயேசுதாசையும் கணேஷனையும் இணைப்பவன், இப்படி பரிசுத்தவான்களின் பெயர்களோடு பாகாலின் பெயர்களை இணைப்பவனும் கள்ள, கபடமுள்ளவர்களே. இவர்கள் தங்கள் சுயலாபத்துக்காக இப்படி பெயர்களை தங்கள் பெயர்களுடன் இணைத்து சூட்டிக்கொள்ளுகிறவர்கள் மக்களை கவர்ச்சி செய்யும் வஞ்சகர்கள்.

73. திருமணத்தில் ஆண்,பெண் செய்யும் உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி/மோதிரம் எதுவும் அணியக்கூடாது, ஒரு பெண் ஆபரணங்கள் எதுவும் அணிந்திருந்தால் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கமாட்டோம் என்கிறவர்கள் தங்கள் வீணான சிந்தனையில் நடக்கும்

(எபே.4:15) சுயநீதி போலி வேலையாட்களாகும். நாம் சுயநீதியாக எதையும் உற்பத்தி செய்யக்கூடாது. தேவநீதி ஒன்றே போதும். இதுகுறித்து நீங்கள் கே.ப.283ல் வாசிக்கலாம். ஒரு பெண் அணிந்துள்ள ஆபரணங்களுக்கும் அவளுடைய இரட்சிப்புக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தீர்க்கத்தரிசி வேதாகமத்தில் தலைமாலை என்னும் ஒரு அடையாள சின்னத்தை விவாக சமயத்தில் பெண்களுக்கு அணியப்பட்டதாகக் கூறுகிறார். அவரும் ஒரு அடையாள சின்னத்தை ஆமோதிக்கிறார். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னை குற்றவாளியாக்காதவன் பாக்கியவான். ரோ.14:22. தாலி / மோதிரம் / தலைமாலை ஒரு பெண் திருமணம் ஆனவள் என்பதற்கு அடையாளம். நீண்ட தலைமயிர் ஒரு பெண் தன் கணவனுடைய ஆதிக்கத்துக்குட்பட்டவள் என்பதற்கு அடையாளம். ஞானஸ்நானம் தேவனுடன் பொருந்தும் நல்மனச்சாட்சிக்கு அடையாளம். இவ்வாறாக ஒவ்வொரு உடன்படிக்கைக்கும் ஒரு அடையாளம் தேவை. இதுகுறித்து நீங்கள் மேலும் அறிய விரும்பினால் **ஸ்திரீ** என்ற செய்தி தொகுப்பை கேட்டு பெற்று பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆதலால் விவாக சமயத்தில் செய்யும் உடன்படிக்கைக்கு அடையாளம் தேவையில்லை எனக்கூறுகிறவர்கள் சுயநீதியை உற்பத்தி சய்கிறவர்கள். ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனமில்லாதவர்கள். தங்கள் சுயஇச்சைகளுக்கேற்ற போதனைகளைக் கொண்டவர்கள், இவர்களையும் விட்டு விலகுங்கள்.

74. பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷர்களிடத்திலும் , தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும் , **வீட்டில் தரித்திருக்கிறவர்களும்** , நல்லவர்களும், தங்கள் புருஷருக்கு கீழ்படிகிறவர்களுமாயிருக்க வேண்டும். தீத்.2:4&5. ஒருவன் தன்னை ஐந்து வகை ஊழியத்தில் இருக்கிறேன் எனக் கூறிக்கொண்டு , தன் மனைவியை வெளியே வேலைக்கு அனுப்பி, அவள் வருமானத்தோடு தனக்கு கிடைக்கும் காணிக்கை, தசமபாக வருமானத்தைச் சேர்த்து தன் குடும்பத்தை நடத்துகிறவன் ஒழுங்கற்று திரிகிற கபடமுள்ள வேலையாள் ஆகும். கர்த்தர் சபையை போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தை (தன் மனைவியை) போஷித்துக் காப்பாற்ற வேண்டும். எபே.5:29

75. ஆவியோடும் , கருத்தோடும் பாடல்கள் பாடி , ஜெபித்து, தேவனை ஆராதிக்க வேண்டிய இடங்களில் மக்களை மாம்ச உணர்ச்சியில் பரவசப்படுத்தும் இசைக் கருவிகளைக் கொண்டு இசைத்துப் பாடி தேவனை ஆராதிக்கும் முறை ஆவிக்குரியவர்களின் ஆராதனையல்ல. பிதாவை உண்மையாய்த் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும். ஏனென்றால் தேவன் ஆவியாயிருக்கிறார். யோ.4:23&24. நாம் மாம்சத்துக்குரியவர்கள் அல்ல, மாறாக ஆவிக்குரியவர்கள். அப்படியிருக்க நாம் மாம்சை இச்சைகளை தூண்டும் இசைக் கருவிகளை ஆராதனை வேளையில் உபயோகிக்கக்கூடாது. என் பெந்தெகோஸ்தே சகோதரர் தங்களுக்கு வேகமான இசை , மேளம் கொட்டுதல், கைகளை தட்டுதல் அல்லது சஞ்சீரா அடித்தல், சத்தமிடுதல் போன்றவை இருக்கவேண்டும் என்ற நிலை அடைந்துள்ளனர். அது உணர்ச்சி வசப்படுதலாகும். (**கல்வாரியில் அந்த நாள்**, பக்கம் 28) இன்றைய பெந்தெகோஸ்தே சபை லவோதிக்கேயா நிலையில் இருக்கிறது. ஆங்கிலேயர் அவலட்சனமான நடனமாடும் போது வாசிக்கும் ராகத்தை சிலர் சபையில் வாசித்து அதை கிறிஸ்தவ மத ஒழுங்கு என்கிறார்கள். பேரிக்கை கொட்டும் போது, ஓ என்று சத்தமிட்டு மேலும் கீழுமாக குதிக்கிறார்கள், அந்த பேரிக்கை கொட்டுகிறதை நிறுத்திவிட்டால் எல்லா மகிமையும் இல்லாமல் போகிறது. தேவனுக்கு அது ஒரு உண்மையான துதியாய் இருக்குமானால் அவர்கள் சீட்டியடிக்க மாட்டார்கள். உண்மையான துதியை நிறுத்த உலகத்தில் வல்லமையில்லை. அது ஆவியானவர் கற்பிக்கும் துதியானால் அவர்கள் டோல் அடிக்கும் போது துள்ளமாட்டார்கள். உண்மையான துதி பரிசுத்தஆவியினால் உண்டாயிருக்கிறது. (**இந்த வேதவாக்கியம் இன்றையத் தினம் நிறைவேறிற்று** , பத்தி 136&137)

76. இசைக்கருவிகள் சாத்தானுடைய கைவேலைப்பாடுகளாகும். எசே.28:13. என் ஊழியத்தின் பாதையில் ஒருமுறை KGF (கோலார் தங்கவயல் - கர்நாடக மாவட்டம்) சென்றிருந்த சமயம் ஒரு கண்தெரியாத சகோதரன் மிக இனிமையாக சஞ்சீரா அடித்து பாடல்கள் பாடுவதை ஆவியானவருடைய வரம் என்று புகழ்ந்தனர். இந்த சகோதரன் ஒரு இடத்தில் பாடல்கள் பாட ஆரம்பிக்கும் முன், அவர் முன்னிருந்த சஞ்சீராவை நான் எடுத்துக்கொண்டேன். அவர் பாடல்கள் பாட ஆரம்பிக்கும் போது என்னிடத்திலிருந்து அந்த சஞ்சீராவைக் கேட்க, நான் அது இல்லாமல் பாடல்கள் பாட அவரைக் கேட்டுக்கொண்டேன். அவர் அது தன்னால் முடியாது எனக் கூறிவிட்டார். அப்படியானால் உங்கள் இனிமையான பாடல் அந்த சஞ்சீரா அடிப்பதில் இருந்துதானே உற்பத்தியாகிறது என்று வினாவ, அவரும் அதை ஒப்புக்கொண்டு, இந்த சஞ்சீரா இல்லாமல் என்னால் பாடமுடியாது என தன் குறையை ஒப்புக்கொண்டார். பிரியமானவர்களே, அந்த சகோதரனுடைய பாடல்கள் பாடும் வரம் தேவனுடைய கிருபை என்று கூற முடியாது. இதுகுறித்து மேலும் நீங்கள் தியானிக்க விரும்பினால் **சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள்** என்ற செய்தித் தொகுப்பை கேட்டு வாங்கி பயன் பெறுங்கள். இசைக்கருவிகளை இசைத்து பாடல்கள் பாடி தேவனை ஆராதிப்பது தேவ பக்தியற்ற ஜென்ம சுபாவமான மனுஷனுடைய ஆராதனை முறையாகும்.

77. இந்நாட்களில் சில சில்லரைகள், தங்களைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணிக் கொண்டு இனி பரிசுத்த வேதாகமத்தை தியானிக்க வேண்டியதில்லை, இக்காலத்துக்குரிய ஆகாரம் தீர்க்கத்தரிசியின் செய்தியில் இருக்கிறது, அதை மட்டும் நாம் புசித்தால் போதும், அது எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தை நமக்குக் கொடுக்கும்

என மாறுபாடானவைகளைப் போதிக்கின்றனர். தேவனுடைய வார்த்தையை கொண்ட பரிசுத்த வேதாகமம் நமது பாடபுஸ்தகம் (Text Book) இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் ஆவியாயும் ஜீவனுமாய் இருக்கிறது. யோ.6:63 தீர்க்கத்தரிசியின் செய்தி ஒரு கையேடு (Guide) ஆகும். வானமும் பூமியும் ஒழிந்து போகும் ஆனால் வேதத்திலுள்ள ஒரு எழுத்தாகிலும் ஒழிந்து போவதில்லை. **நாம் கிறிஸ்துவை இன்று எழுத்து வடிவில் பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம்.** ஏனென்றால் தேவன் வார்த்தையாயிருக்கிறார். இப்படியிருக்க இந்த பேலியாலின் மக்கள் தேவனுடைய வார்த்தையை தியானிக்க தேவையில்லை எனக் கூறுகிறார்கள். இவர்கள் மாயையில் சிக்கி விடாதீர்கள்.

78. திருவசனம் களங்கமில்லாத ஞானப்பால். வாருங்கள் நாம் வளரும்படி இதில் வாஞ்சையாய் இருப்போம். 1பேது.2:3 இருள் உள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தை கவனித்திருப்பது நமக்கு நலமாயிருக்கும். 2பேது1:19 தேவனுடைய வசனம் ஆவியின் பட்டயம். எபே.6:17, எபி.4:12. ஆதலால் இது ஒன்றே சாத்தானுக்கு எதிராக பயன்படுத்தப்படக்கூடியது. இதை தியானித்து நீங்கள் சாத்தானை எதிர்த்து நிற்கக்கூடாதபடிக்கு அவன் உங்களை உங்கள் பட்டயத்தை புறக்கணிக்கத் தூண்டுகிறான். ஆதலால் அவனையும் அவனுடைய உபதேசங்களைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருங்கள். இப்படிப்பட்ட மாறுபாடான உபதேசங்களைக் கொண்டு வருகிறவர்களும் மந்தையைத் தப்பவிடாத கொடிதாய ஓநாய்களே.

79. துர்புத்தியுள்ள சிலர் சபை கூடும் இடங்களில் பெண்கள் ஜெபம் பண்ணக் கூடாது, சபையில் அனைவரும் முழங்காலில் நின்று ஜெபிக்கக் கூடாது, மாறாக எழுந்து நின்றே ஜெபிக்க வேண்டும், இது தீர்க்கத்தரிசி நமக்கு கற்பித்துக் கொடுத்த பாடம் எனக் கூறி சபை கூடும் இடங்களில் பெண்களை ஜெபிக்கவிடுவது கிடையாது, யாரையும் முழங்காலில் நின்று ஜெபிக்கவிடாது எழுந்துநின்றே ஜெபிக்கச் செய்கிறார்கள். இவர்கள் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். ஜெபம் என்பது நாம் தேவனோடு உறவாடுதலாகும். அதாவது ஒருவன் தேவனோடு நெருங்கி உறவாடி தன் இருதயத்தை ஊற்றிவிடுதல் ஆகும். உதா.: மத்.21:22, அப்.1:14, 2:42 & 12:5. இது தேவனுடைய நாமத்தினாலே ஏறெடுக்கப்படவேண்டும். ரோ.14:13, 15:16, 16:23-36. மேலும் ஜெபம் ஒருவனுடைய நோக்கத்தையன்று, தேவனுடைய சித்தத்தை தேடுவதாக இருக்கவேண்டும். மத் 6:10 , 26:42. ஜெபம் செய்யும் போது ஒருவன் நிலை ஜெபத்தின் நோக்கத்தை முழுவதுமாக சார்ந்திருக்கிறது. ஒருவன் நின்று கொண்டும் மாற்.11:25, முழங்கால்படியிட்டும் லூக்.22:41, அப்.21:5, தலைகுனிந்தும் ஆதி.24:26, யாத்.34:8, முகம் குப்புறவிழுந்தும் மத்.26:29 ஜெபம் செய்வதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அதோடு மட்டுமல்ல சிலர் ஆழ்ந்த மனஸ்தாபத்தோடு மார்பில் அடித்துக்கொண்டு ஜெபம் செய்வதையும் காண்கிறோம். லூக்18:13. யூதர்கள் தங்கள் தாய்நாட்டை நோக்கி கைகளை நீட்டிக்கொண்டு ஜெபம் செய்ததையும் 1இரா.8:44 & 48, சிலர் வானத்துக்கு நேரே தங்கள் கைகளை உயர்த்தி, விரித்துக்கொண்டு ஜெபம் செய்ததையும் 1இரா.8:22, எஸ்.9:5, 1தீமோ.2:8ல் வாசிக்கிறோம்.

80. பொதுவாக சகோ.பிரன்காம் செய்தி வேளையில் தனது செய்திப் பகுதியை வேதத்திலிருந்து எடுத்து வாசிக்கும் போது, ஜனங்களை எழுந்து நிற்கக்கூறி , தானே அந்தப்பகுதியை வாசிக்கிறார். நமது நாட்டின் கொடி பறக்கும் போது நாம் யாவரும் எழுந்து நின்று அதற்கு மரியாதை செலுத்துகிறோம். இப்படியிருக்க தேவனுடைய வார்த்தையை நாம் வாசிக்கும் போது அது எவ்வளவு முக்கியமானது, அதற்காக நாம் நின்று மரியாதை செலுத்தவேண்டியது மிக்க அவசியம் எனக் கூறுகிறார். இதை நாமும் கடைபிடிப்பது நல்லது. அதற்காக சபையில் ஜெப வேளையில் நாம் எல்லோரும் எழுந்து நின்று தான் ஜெபிக்க வேண்டும் என்ற உபதேசத்தைக் கொண்டு வருவது பேய்த்தனத்துக்கடுத்தாகும். மேலும் இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படி பிலி.2:10, முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும் யோ.14:11, முழங்கால்படியிட்டு ஜெபிப்பது குறித்து அப்.7:60, 9:40, 20:36 & 21:5 போன்ற வசனங்களில் வாசிக்கிறோம். ஆதலால் முழங்கால் படியிட்டு ஜெபிக்கக் கூடாது என்ற உபதேசம் மூர்க்கத்தனமானது. இதுவும் மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களின் உபதேசமே.

81. ஜெபம் பண்ணுகிற போதும், தீர்க்கத்தரிசனம் சொல்லுகிற போதும் ஒரு ஸ்திரீ தன் தலையை தன் சேலைமுந்தானி, கைக்குட்டை, தொப்பி போன்ற ஏதாவது ஒன்றினால் மூடிக்கொள்ள வேண்டும் என்பதும் மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்களின் உபதேசமே. ஸ்திரீ தன் தலைமயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1கொரி.11:15 , ஒரு பெண்ணுக்கு நீண்ட தலைமயிர் மகிமை அதாவது அவள் தன் கணவனுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்படிகிறவள் என்பதற்கு அது எடுத்துக்காட்டாகும். அவள் தன் தலைமயிரை மறைக்கும் போது தன் மகிமையை மறைக்கிறாள். அதன்மூலம் அவள் தேவ சமூகத்தில் வந்து தான் தன்னுடைய கணவனது அதிகாரத்திற்கு உட்பட்டவள் அல்ல என்பதை தெரிவிக்கிறாள். ஒரு பெண் நீண்ட தலைமயிர் உடையவளாக , அதை எந்தவிதமான வஸ்திரங்களைக் கொண்டும் மறைக்காது தேவ சமூகத்தில் வந்து நிற்பாளாயின் அவளே உண்மையான கிறிஸ்தவப் பெண். அவ்வாறு வந்து நிற்பதே சபை ஒழுங்கு ஆகும். இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது? நீங்கள் என்ன நினைத்தாலும் சரி, ஒரு ஸ்திரீக்கு நீண்ட தலைமயிரே அவளது தலைமுக்காடு, **இது கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாகும். கே.ப.18 இது குறித்து நீங்கள் மேலும் தியானிக்கவிரும்பினால் **ஸ்திரீயின் தலைமுக்காடு** என்ற செய்தித் தொகுப்பை கேட்டு பெற்று பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

**உன்னிலிருக்கும் தேவனுடைய வார்த்தையே பரிசுத்த ஆவியாயிருக்கிறது. வார்த்தையை ஏற்றுக்கொள்ளும் போது ஆவி உன்னில் நிரூபிக்கப்படுகிறது. வார்த்தைக்கு வெளியே இருப்பவைகள் பரிசுத்த ஆவியல்ல. ஓரேயொரு வார்த்தையை மறுதலிக்கும் ஆவி பரிசுத்த ஆவி ஆகாது. நீ நம்பினாலும் , நம்பாவிட்டாலும் அது தான் பரிசுத்த ஆவிக்கு அடையாளம். (இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று,** பத்தி 135)

82. பொதுவாக இக்காலத்தின் செய்தியில் இருந்து ஊழியம் செய்து வருகிறோம் என்பவர்களால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டு வருகிறதேயன்றி மகிமைப்பட்டதாகயில்லை. ஏனென்றால் அவர்களுக்குள் தேவனுக்குப் பயந்தவர்கள், உண்மையுள்ளவர்கள், பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையான மனிதர் மேய்ப்பர்களாக இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்கு சரிபோனபடி செய்து வருகிறான். அவர்களில் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் பொருளாசைக்காரர்களாகவே இருக்கிறார்கள். நம் நடுவிலிருக்கும் பெரும்பாலான மேய்ப்பர்கள் இரைகவ்வுகிற ஓநாய்களைப்போல் இருக்கிறார்கள். இவர்களது கிரியையும் , அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் , நன்மையானாலும், தீமையானாலும் தேவனநியாயத்திலே கொண்டு வருவார் அன்று பொருளாசைக்காரராகிய விக்கிரக ஆராதணைக்காரர்களாகிய இவர்களுக்கு நேரிடும் வாதைகளில் நீங்கள் அகப்படாமல் இருக்கும்படிக்கு சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் தேவன் நியாயம் தீர்க்கும் காலம் இனி இருக்கிறபடியால் அவர்களுடைய சபையின் ஐக்கியத்தை விட்டு விலகி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். இது சத்தியத்துக்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலமாயிருக்கிறது. ஒருவன் வார்த்தையை கேட்கும் , தன் மன இஷ்டப்படி நடந்து எனக்கு சுகமுண்டாயிருக்கும் என்று தன்னை தேற்றிக் கொண்டால் கர்த்தர் அவனை மன்னிக்க சித்தமாயிரார். ஆதலால் பிரியமானவர்களே மந்தையைத் தப்பவிடாத கொடதான ஓநாய்களை அடையாளம் கண்டு வேடனாகிய பிசாசின் கண்ணிலே சிக்கி அவன் வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு சத்தியமார்க்கத்திலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருந்து, ஞானமென்று பொய்யாய் பெயர் பெற்றிருக்கிற அவர்களுடைய கொள்கைகளின் விபரீதங்களுக்கு விலகி, விக்கிரகாராதனையாகிய பொருளாசைக்கு பங்காளிகளாகாமல் ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளுங்கள். சிலர் விபரீதமான கொள்கைகளை பாராட்டி விசுவாசத்தை விட்டு வழுவிப்போனார்கள்.

83. தேவன் என்னை ஒரு நோக்கத்துக்காக இரட்சித்தார். இக்காலத்துக்குரிய செய்தியை என் உள்ளத்தில் வைத்தார். அவருடைய சித்தப்படி அந்த நோக்கத்தை நிறைவேற்றுவது என் மேல் விழுந்த கடமை. மற்றது எப்படி சென்றாலும் எனக்கு கவலையில்லை. யாருடைய ஒத்துழைப்பும் எனக்கு இருக்காது. ஆனாலும் நான் அதை நிறைவேற்றியாக வேண்டும். இக்காலத்துக்குரிய செய்திக்குள் மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் நிறைந்துள்ளதால், அவைகளை அடையாளம் காட்டி, அவைகளின் செய்கைகளை கடிந்துகொண்டு, தேவனால் முன் அறிந்து முன்குறிக்கப்பட்ட ஜனங்களை அவைகள் பீறிப்போடாதபடிக்கு நான் எக்காளம் ஊதி அவர்களை அவைகளின் வாய்க்கு தப்புவிக்க வெளியே அழைக்க வேண்டும். ஆம், நான் அதைத்தான் செய்கிறேன். கிருபையானது உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்துவின் அன்பில்,

ஆகஸ்ட், 2002

**சகோ. காலேப் யோசுவா**